மன்றம்

வார ஏடு

ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 7 ★ 16-6-57 சென்னை ★ விலை 16 காசு

மந்திரிகள் சம்பளம் குறைத்துக்கொள்ள மறுப்பு!

கராச்சி தீர்மானத்துக்குச் சமாதானம் கூறும் நேரு பண்டிதர்!

பெரிய அதிகாரி மிகக் கவலையுடன் சோபாவில் சாய்ந்திருந்தார். அவரைப் பார்க்கவந்த நண்பருக்கு அது ஆச்சரியமாயிருந்தது.

"ஏன் இப்படிச் சோர்ந்து உட்கார்ந்து இருக்கிறீர்கள்?" என்று நண்பர் கேட்டார்.

"உத்தியோகம் பார்த்து என்னபலன்? பத்து தேதியாவதற்குள் கையில் இருநூறு ரூபாய்கூடத் தங்கமாட்டேன்கிறது! அடிக்கடி பணமுடை ஏற்பட்டுவிடுகிறது."

அந்த அதிகாரி நல்ல நிலையிலிருப்பவர், மாதம் ஒன்றுக்கு 3000 ரூபாய்க்கு மேல்சம்பளம் பெறுபவர் அவருக்கே நிலைமை மோசமாகிறதென்றால், பார்க்க வந்த நண்பருக்கு அது புரியவில்லை. அதிகாரி அப்படியொன்றும் பெரிய செலவாளியில்லை, சிக்கனக்காரர்தான், அவராலேயே சமாளிக்க முடியவில்லை!

"உங்களுக்கு வருகிற சம்பளத்துக்கு..."

"ஆமாம் மூவாயிரத்துக்குமேல் வந்தும், சம்பளம் வாங்கின நாலைந்து நாட்களுக்குள் முன்னூறு ரூபாய்தான் மிஞ்சுகிறது, கண்மூடி கண் திறப்பதற்குள் பணமெல்லாம் தீர்ந்துவிடுகிறது."

"அப்படியா?"

"ஆமாம்! என்கணக்கைச் சொல்கிறேன் கள்! மூவாயிரம் ரூபாய் சம்பளம் வருகிறதா, அதில் 1500 ரூபாயை பாங்கில் போட்டுவிடுகிறேன். பிறகு 300 ரூபாயை இன்சூரன்சுக்கு அழவேண்டியிருக்கிறது. பட்பண்டுக்காரன் வந்து 200 ரூபாயைத் தட்டிக்கொண்டு போகிருன். சேவிங்ஸ் பாங்கு அக்கவுண்டில் 100 ரூபாய் போடவேண்டியிருக்கிறது, காலேஜில் படிக்கிற இரண்டு பையன்களுக்குக் குறைந்தது 200 ஆகிறது. இப்படி பணம் நாலா வழியிலும் போனபிறகு, எவ்வளவு மிஞ்சும்? சொந்த பங்களா இருப்பதால் தப்பித்தேன், இல்லாவிட்டால் மிகவும் சிரமந்தான்."

"மிகவும் சிரமந்தான்" என்று நண்பர் பேச்சை வளர்த்தாமல் நிறுத்திக்கொண்டார்.

* * *

"காங்கிரசு மந்திரிகள் 2000 ரூபாய் சம்பளம் வாங்குகிருர்களே அது கூடாது, சமதர்ம ஆட்சிக்கு உதாரணமாக முதலில் மந்திரிகள் தங்கள் சம்பளங்களை 100 ரூபாய்க்குள்ளாகக் குறைத்துக்கொள்ள வேண்டும்." என்று காங்கிரசுக் காரியக் கமிட்டியில் பனரிஸ் தாஸ் என்பவர் தீர்மானங் கொண்டுவந்தார். அதன்மீது பலத்த விவாதம் நடந்தது. கூச்சல், குழப்பம், ஆவேசம் இருந்தன. கடைசியாக ஓட்டு எடுக்கப்பட்டது, 32 பேர்கள் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், 38 பேர்கள் எதிர்ப்பதாகவும் தலைவர் அறிவித்தார். "மீண்டும் சரியாக எண்ணுங்கள்!" என்று தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் கேட்டார். "முடியாது தீர்மானம் தோற்றது!" என்று தலைவர் அறிவித்தார்.

மந்திரிகள் வெற்றிபெற்ருர்கள், அவர்களுடைய சம்பளங்கள் காப்பாற்றப்பட்டன.

தீர்மானம் தோல்வியடைந்ததுகூட ஆச்சரியப்படத்தக்கதில்லை. தீர்மானத்தை அவ்வளவுபேர் ஆதரித்தார்களே என்பதுதான் ஆச்சரியமானது. "சமதர்மத்தைப் பேசுவதுமட்டும் கூடாது, அதன்படி நாம் நடந்துகாட்டவேண்டும்!" என ஒருசிலர் காங்கிரசில் இருந்துகொண்டு நினைக்கிருர்களே அதுதான் ஆச்சரியமானது. "கராச்சி தீர்மானப்படி மந்திரிகளின் சம்பளம் 500 ரூபாய்க்குமேல் போகக்கூடாது" என்று இன்னும் கராச்சி தீர்மானங்களையும், அந்தக் காலத்திலிருந்த காங்கிரசையும் நினைத்துக்கொண்டு சிலர் பேசுகிருர்களே, அது

(10-ம் பக்கம் பார்க்க)

பாரத சாரணர் அமைப்பில் வடக்கு—தெற்கு!

வடக்கு—தெற்கு என்ற பிரச்சினை வெறும் அரசியல் உலகத்தில் பேசப்படும் பேச்சாக மட்டுமில்லை. பொருளாதாரத் துறையை ஆராய்பவர்கள், தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், அவர்களையும் அறியாமல் பல தடவைகளில் வடக்கு-தெற்கு என்ற வேற்றுமையைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. இவைகள் கலைத்துறையில் வெளிநாட்டுக்கு இந்தியக் குழு அனுப்பப்பட்டால், வடநாட்டுக்காரர்களுக்கு இடம் தரப்பட்டது, தென்னுட்டுக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்று பேசப்படுகிறது. விளையாட்டுக்குழுக்கள் பொறுக்கப்பட்டபொழுது வடநாட்டுக்காரர்களையே ஆதரிக்கிருர்கள், எவ்வளவுதான் நன்ருக விளையாடத் தெரிந்தாலும் தென்னுட்டுக்காரர்கள் முக்கியமான பந்தயங்களுக்குப் பொறுக்கப்படுவதில்லை என்ற புகார்கள் வருகின்றன,

இப்பொழுது "வடநாடு அதிகமாகக் கவனிக்கப்படுகிறது, தென்னுடு முழுவதும் புறக்கணிக்கப்படுகிறது!" என்ற கூக்குரல், யாரும் எதிர்பார்க்காத, அரசியல் பூசல்களுக்கு மிக அப்பாற்பட்ட ஒரு அமைப்பிலிருந்து கிளம்பியுள்ளது. அதுதான் தென்னுட்டு பாரத சாரணர் குழு! தமிழ்நாடு, ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களையும் சேர்ந்த சாரணர். (ஸ்கௌட்ஸ்) அமைப்புகளின்மாநாடு உதகமண்டலத்தில் கூடியது. அதில் மைசூர் மாநிலச் சாரண அமைப்பின் தலைவராக இருக்கும் மல்லரோதியா என்பவர் கீழ்க்கண்டவாறு பேசியுள்ளார்.

"டில்லியிலுள்ள பாரத சாரணர் அமைப்பின் தலைமைப்பீடம் பேத உணர்ச்சியுடனும், தான்தோன்றிப் போக்கிலும் நடந்துகொள்கிறது. வடநாடு என்ருல் தனியாகச் சலுகைகள் காட்டியும், தென்னுடு என்ருல் அத்தகைய சலுகைகள் தராமலும் அது நடந்துவருகிறது."

டில்லியிலுள்ள மத்திய குழுவுக்கு தென்பகுதியின் உரிமைகளை வலியுறுத்தவும், அதற்கான தகுந்த நீதி பெறவுமே அந்த மாநாடு முக்கியமாகக் கூட்டப்பட்டதாக, மைசூர் சாரணர் தலைவர் மல்லரோதியா குறிப்பிட்டாராம்.

வடக்கு-தெற்கு வெறும் அரசியல் பேச்சு மட்டுமல்ல; அந்தப்பிரச்சினை எல்லாத் துறைகளிலும் எழுகிறது. காரணம் எல்லாத் துறைகளிலும் அந்த வேறுபாடு காணப்படுகிறது. அடிப்படையாகப் பார்த்தால் அந்த வேறுபாடு இருக்கத்தான் செய்யும், வடக்கு, தெற்கு என்று இரண்டு வேறுபட்ட அமைப்புகள் இருக்கின்ற காரணத்தால்! வேறுபட்ட இரு பகுதிகளை வலுக்கட்டாயமாக பிணைத்து வைப்பதால் மனப்பூசல் அடிக்கடி மூளுகின்றன!

500 கோடி ரூபாய்க்கு ஊழல்!

—(0)—

ஐந்தாண்டுத் திட்டத்தில் நடைபெறும்

—(0)—

காங்கிரசு பாராளுமன்ற உறுப்பினர் தரும் தகவல்!

—0—

ஊழலை வெளிப்படுத்தினால் மந்திரி பதவிக்குக்கூட ஆபத்து!

—0—

முன்பெல்லாம் ஏதாவது ஒரு காரியத்தில் ஊழல் நடைபெற்றது என்றால் பொதுமக்கள் மிக உன்னிப்பாகக் கவனிப்பார்கள்.

இப்பொழுது ஏதாவது ஒரு காரியம் ஊழல் இல்லாமல் நடைபெறுகிறதென்றால் பொதுமக்கள் மிக ஆச்சரியத்துடன் கவனிக்கிறார்கள்.

காங்கிரசு ஆட்சியில் வேறு எந்தத் திறமை வளரவில்லையென்றாலும், ஊழல் திறமை மிக அபரிமிதமாக வளர்ந்துள்ளது. அரசாங்கக் காரியங்களில் ஊழல் ஒத்துக்கொள்ளப்பட்ட எதிர்பார்க்கவேண்டிய ஒரு பகுதியாகிவிட்டது. அரசாங்கத்தில் நியாயமான ஒரு வேலையாகவேண்டுமென்றால் கூட, இலஞ்சம் கொடுக்கவேண்டுமென்பது சர்வசாதாரணமான நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. ஒரு பர்மிட்டோ, ஒரு பஸ் பாதையோ வேண்டுமென்றால், ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு என்று "மாமுல்" பணம் ஏற்பட்டுவிட்டது. ஏதோ விண்ணப்பத்தாளுடன் செலுத்தவேண்டிய கட்டணம் போல, மாமுல் தொகை ஆகிவிட்டது. அரசாங்க காரியமென்றால், ஊழலுக்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கியாகவேண்டும். அப்பொழுதுதான் காரியம் நடக்கும். இல்லாவிட்டால் எவ்வளவு தான் நியாயமான கோரிக்கையாக இருந்தாலும், அது "சிகப்பு நாடாவால்" கட்டப்பட்டு, கனமான கட்டுகளிடை மறைந்து போகும்.

காங்கிரசு ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது. அதிலும் ஐந்தாண்டுத் திட்டங்களில் ஊழல் வெகுவேகமாகப் பரவியது. காங்கிரசுக்காரர்களுக்கு இது தெரியாதா என்றால் நன்றாகத் தெரியும்.

"திட்டங்களை நிறைவேற்றுவதில் ஊழலும் திறமையற்ற போக்கும் நிலவுவதை யாரும் மறுக்கமுடியாது. கண்காணிப்புடன் நடந்தால், ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 10 சதவிகிதம் அல்லது 500 கோடி ரூபாய்களையாவது வீணாகாமல் நாம் தடுக்கலாம்" எனக் காங்கிரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. டி. பாண்டே என்பவர் கூறியுள்ளார்.

காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே ஒப்புக்கொள்ளவேண்டிய அளவு, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊழல் அதிகமாகப் புகுந்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பத்தில் ஒரு பகுதி அதாவது 500 கோடி ரூபாய் ஊழலுக்காகப் போகிறது என்றால், அது கொஞ்ச நஞ்சமல்ல. பத்துக்கோடி ரூபாயில் ஒரு திட்டம் போடுகிறார்கள் என்றால், அதில் ஒரு கோடி ரூபாயை ஊழலுக்காக ஒதுக்கிவிடுகிறார்கள் என்று அர்த்தம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் ஊழலில் மறைந்து விடுகிறதென்றால் அது சிறு தொகையல்ல. சென்னை, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள திட்டங்களும் அந்த அளவுதான் வரும். ஆக ஐந்தாண்டுத் திட்டத்தின் ஊழல்கள் தடுக்கப்பட்டால், தென்னாட்டுக்குத் தரப்படும் திட்டங்களை இரண்டு மடங்காக அதிகப்படுத்தலாம்!

இப்பொழுது கனம் கிருஷ்ணமாச்சாரியார் அதிகமான வரிகளைப் போட்டிருக்கிறாரே, சர்க்கரை மீது, தீப்பெட்டி மீது தாவர எண்ணெய்கள் மீது புகையிலை மீது, சிமிண்டு மீது, இரும்பு மீது, காகிதத்தின் மீது இப்படியாக 108 புதிய வரிகள் போட்டு நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தத் தலைப்பட்டிருக்கிறார். அந்தப் புதிய வரிகள் மூலம் ஆண்டுதோறும் 100கோடி ரூபாய்களை எதிர்பார்க்கிறார். ஐந்து ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் புதுவரிகளால் வரும். காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர் சி. டி. பாண்டே கூறுகிறபடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வீணாய் இருக்கும் 500 கோடி ரூபாய் தவிர்க்கப்பட்டால், பொது மக்களிடமிருந்து புதிய வரிகள் வசூலிக்கப்படவேண்டிய அவசியம் இருக்காது!

ஊழல்கள், ஒழுங்கீனங்கள், திறமையின்மை, தனிப்பட்ட சலுகை முதலியவை அரசாங்கக் காரியங்களில் இருப்பது, காங்கிரசுக்காரர்கள் பலருக்குத் தெரியும், ஒவ்வொரு மாநிலக் காங்கிரசுத் தலைவருக்கும், காங்கிரசுமந்திரிகளுக்கும் அந்தமாநிலத்தில் நடைபெறும் ஊழல்கள் தெரியும். சி. டி. பாண்டே போன்று ஓரிருவர் மட்டும் கண்டிக்கிறார்கள், மாநிலக் காங்கிரசுத் தலைவர்களும், காங்கிரசு மந்திரிகளும் அவற்றை அனுமதித்தபடி இருக்கிறார்கள். அந்த ஒழுங்கீனங்கள், ஊழல்கள், தனிப்பட்ட சலுகைகள் ஆகியவைதாம் தேர்தல் காலத்தில் அவர்களை வெற்றி பெறச் செய்தன; பிறகு மந்திரி சபைகளை அமைத்தன. மந்திரி பீடங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. ஊழலைக் கண்டிப்பதென்றால், ஏதோ ஆபத்தான காரியத்தைச் செய்வதாக காங்கிரசுக்காரர்களுக்கு ஆகிவிட்டது.

மேற்கு வங்காள மாநிலத்தில் டாக்டர் ராய் என்பவர் சுகாதார மந்திரியாக இருக்கிறார். கல்கத்தாவில் உள்ள ஒரு ஹாஸ்பிட்டலில் (மருத்துவ நிலையத்தில்) ஊழல் நடைபெறுவதாக அவருக்குச் செய்தி வந்தது. அவர் திடீரென்று ஒருநாள் சாதாரண உடையணிந்து, மருத்துவ நிலையத்திற்கு பால்டின்கள் வந்து இறங்கும் சமயம் போய்ச் சேர்ந்தார். தூரத்திலிருந்த பால் பண்ணையிலிருந்து அன்றாடம் பால் கறக்கப்பட்டு, பெரிய பாத்திரங்களில் அடைக்கப்பட்டு, யாரும் திறக்க முடியாதபடி மூடியின் மேல் சீல் வைத்து அனுப்பப்படுகிறது. அந்தப் பால் நோயாளிகளுக்குத் தருவதற்காக அனுப்பப்படுவது.

ஆனால் நோயாளிகளுக்குத் தரவேண்டிய அளவு தரப்படுவதில்லையெனப் புகார் வந்தது. அதைக் கவனிக்கவே மந்திரி வந்திருந்தார். பால் பாத்திரங்கள் வந்ததும் அதை வேலைக்காரர்கள் இறக்கிப் போய், ஒரு இடத்தில் வைத்து, மூடிமேலிருந்த சீலை உடைக்காமலேயே உள்ளிருந்த பாலில் ஒரு பகுதியை வெளியே எடுத்து விட்டார்களாம்! அவர்களது சாமர்த்தியத்தைக் கண்ட மந்திரிக்கு ஆச்சரியமாகிவிட்டது. இவ்வாறு சாமர்த்தியமாக எடுத்தபாலை அந்த வேலைக்காரர்கள் அங்குள்ள ஒரு அதிகாரி வீட்டிற்குக் கொண்டுபோகும்பொழுது, மந்திரி குறுக்கிட்டு, தான் யாரென்பதை அறிவித்து, போலீசை அழைத்து, குற்றத்தை விசாரணைக்குக் கொண்டுவரும்படி சொல்லியுள்ளாராம்.

ஊழல்களைக் கண்டு பிடிப்பதில் காங்கிரசுமந்திரி ஒருவரே மிக ஊக்கத்துடன் இருக்கிறாரென்றால், அந்தச் செய்தியைக் கேட்பவர்கள் பொதுவாக மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் கல்கத்தாவில் இந்தச்செய்தி பரவியதும், வேறு விதமான வரவேற்பு இருந்திருக்கிறது. இந்தச் செய்தியைப்பற்றி எழுதிய பத்திரிக்கை சொல்கிறது "இதற்குப்பின் திரைமறைவு வேலைகள் எதுவும் நடைபெறாமல் இருக்குமென்றும், ஊழலைக் கண்டுபிடித்த மந்திரிக்கு பதவி போகாமல் இருக்குமென்றும் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்."

ஊழலைக் கண்டுபிடித்த மந்திரியைப் பாராட்டுவதைவிட்டு "பயப்படவேண்டாம், உங்களுடைய மந்திரி பதவி போய்விடாது" என்று தைரியம் கொடுத்தால் என்ன பொருள்? காங்கிரசு ஆட்சியில் ஊழலைக் கண்டுபிடிப்பது அவ்வளவு ஆபத்துக்களில் கொண்டு போய்விடும் என்பதாகும். மருத்துவ நிலையமொன்றில் பால்திருட்டுப்போகும் ஊழலை ஒரு மந்திரி மிகவும் சாமர்த்தியமாகக் கண்டுபிடித்தாரென்றால் அது மிகச் சிறிய ஊழலைக் கண்டுபிடிப்பதாகும். இருந்தாலும், ஒருஊழல் கண்டுபிடிக்கப்பட்டால் வழக்கமாக என்ன நடைபெறுமென்றால், ஊழலில் சிக்கியவன் திரைமறைவு வேலைகளைத் தொடங்குவான். காங்கிரசு எம். எல். ஏக்களைப் பிடிப்பான், காங்கிரசுக்கமிட்டித் தலைவர்களிடமிருந்து சிபாரிசுக் கடிதங்களைப் பெறுவான், பின் காங்கிரசு மேலிடத்திலிருந்து "அந்தவழக்கை விட்டுவிடு" எனத் தாக்கீதுவரும். இது ஒவ்வொரு ஊழல்கண்டுபிடிக்கப் படும்பொழுது வழக்கமாக நடைபெறுகிற காரணத்தால் தான், கல்கத்தா மக்கள் "இந்த ஊழலில் திரைமறைவு வேலைகள் பலனளிக்காது" என எதிர்பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஊழலைக் கண்டுபிடிக்கப் பாடுபட்ட பலர் பதவி இழந்து, உத்தியோகத்திலிருந்து விரட்டப்படுவதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். எனவே "ஊழலைக்கண்டுபிடித்த மந்திரிக்கு பதவி போகாதே!" என அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

ஒரு மருத்துவமனையில் நடை
பெற்ற பால்பறிபோகும் ஊழ

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 16—6—57 சென்னை

வருமுன் காக்க!

★

குதிரை காணமற்போன பின் கொட்டடி பூட்டப்படுவதுபோல, உணவுப் பொருள்களின் விலைகள் மிக உச்சநிலையை அடைந்த பின் உணவு விலைகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை இந்திய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. அந்தச் சட்டத்தின் துணையால் விற்பனைக்கு வரும் உணவுப்பொருள்களின் விலையை நிர்ணயிக்கும் உரிமையையும் முறையையும் அரசாங்கம் பெற்றுள்ளது. அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்த விலைகளின் சராசரியை எடுத்து, அந்த சராசரி விலையை அப்பொழுதைய நியாய விலையாகக் கட்டுப்படுத்தச் சட்டம் இடம் தருகிறது. விலைக் கட்டுப்படுத்தப்படுகிற தென்றால், இப்பொழுது உயர்ந்துள்ள விலை மேலும் உயராமல் பாதுகாக்க வேண்டுமானல் சட்டம் உதவுமேயன்றி, ஏழைகளால் தாங்க முடியாத அளவு உயர்ந்துள்ள விலைகளைக்குறைப்பதற்கான வழியை அரசாங்கம் காணவில்லை. உயர்ந்துள்ள விலைகள் உயர்ந்தவைதான், இனிமேல் வேண்டுமானல் மேற்கொண்டு விலைகள் உயராமல் கண்காணிக்க இடமிருக்கிறது. ஓடிப்போன குதிரை ஓடிப்போனது தான், கொட்டடியின் கதவு சாத்தப்படுவதால் மேலும் உள்ளிருக்கும் மற்றசாமான்கள் காணமல் பாதுகாக்கப்படலாம்.

விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்துக்கு வந்துள்ளதேனும், எந்த அளவு, எவ்வளவு வெற்றிகரமாக அரசாங்கம் அதை உபயோகித்து உணவுப்பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்தும் என்பது தெரியவில்லை. நல்ல சட்டத்தைப் போட்டுவிடுவதால் மட்டும் நாட்டில் ஏற்பட்டுள்ள நலிவு நீங்கிவிடுமென்றால், இன்று பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனல் திறமையற்ற போக்காலும், ஊழல் நிறைந்த தன்மையாலும் இந்திய அரசாங்கம் பல தடவைகள் நல்ல சட்டங்களை நிறைவேற்றத் தவறியிருக்கிறது. அரசாங்கம் திறமையுடன் நடந்திருந்தால், பல பஞ்சங்களை நாடு காணமல் இருந்திருக்கும்; பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவுகளுக்கு பலியாகாமல் இருந்திருப்பார்கள். நாட்டை வாட்டுகின்ற உணவுப் பஞ்சத்துக்கு, அரசாங்கத்தின் "திறமைப் பஞ்சம்" பல தடவைகளில் காரணமாயிருந்திருக்கிறது.

விலையேற்றத்திற்காகக் காத்துக்கொண்டு, உணவுப்பொருள்களைப் பதுக்குபவர்களை இந்தச் சட்டம் வழிக்குக் கொண்டுவரும் எனக் கூறப்படுகிறது. விலைக்கட்டுப்பாடு செய்வதால் பதுக்கப் படும் உணவுப்பொருள்களை வெளியே கொண்டு வந்துவிடலாம் என நினைப்பது வெறும் பகற்கனவாக முடியக்கூடும். ஒரு புறம் விற்கப்பட வேண்டிய விலை நிர்ணயிக்கப்பட்டு, மற்ருருபுறம் பதுக்கி வைப்பவர்களிடம் பண்டங்களும் இருந்தால், பதுக்கிவைக்கப்பட்ட பொருள்கள் நியாய விலைக்கு வந்துதானக வேண்டுமென்பதில்லை. நியாய விலைக்கும் பதுக்கப்பட்ட பொருளுக்கு மிடையில் கள்ளமார்க்கட் என்பது உண்டாகும். சண்டைக் காலத்திலும் அதை அடுத்தும் பல பொருள்களுக்கு அரசாங்கத்தால் விலைகள் கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. அப்பொழுது பதுக்கப்பட்டிருந்த பொருள்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வெளியில் வரவில்லை. மறைவாக கள்ளமார்க்கட்டில் புகுந்து, ஒன்றுக்கு மூன்ருக நான்காக, உயர்த்தப்பட்ட விலையில் அவை விற்கப்பட்டன. அதேபோல் இப்பொழுது விலைக் கட்டுப்பாடு ஏற்படும்பொழுது கள்ளமார்க்கட் வியாபாரம் பெருத்த அளவில் தலை தூக்கலாம். இதைக் கூறுவதால் விலைக்கட்டுப்பாடு செய்வது தவறு என்று நாம் கூறவில்லை. பதுக்கப்பட்ட உணவுப்பொருள்களை தான் நிர்ணயிக்கும் விலைக்கு எடுத்துக் கொள்வதாலேயே, நிலைமையைச் சமாளித்துவிட முடியாது.

முதலாவதாக, மூன்று மாதகாலத்துக்குச் சராசரி விலையை எடுப்பதால், ஏறியுள்ள அநியாய விலையை அரசாங்கம் ஒப்புக்கொண்டதாகும். இதனல் பதுக்கியவர்கள் எதிர் பார்க்கிற பலனை அரசாங்கமே ஓரளவு பூர்த்தி செய்துவிடுகிறது.

இரண்டாவதாக பதுக்கப்பட்ட உணவுப்பொருள்கள் கள்ளமார்க்கட்டில் மறைவாக விற்கப்படுவதை அரசாங்கம் எந்த அளவு திறமையுடன் தடுத்து வெளிக்கொண்டு வரப்போகிற தென்பது தெரியவில்லை. பற்ருக்குறை ஏற்பட்டு கள்ளமார்க்கட்டுகள் தோன்றிய சமயத்திலெல்லாம், இந்திய அரசாங்கம் அவற்றை ஒடுக்காமல் மக்களைத் தவிக்க விட்டிருக்கிறது. ஒன்று கள்ளமார்க்கட்டுகளை ஒடுக்கி கள்ளமார்க்கட்டுக்காரர்களைக் கடுமையாகத் தண்டித்து, நிர்ணயிக்கப் பட்ட விலைக்கே பொருள்களைக் கிடைக்கும்படிச் செய்யத்தக்க ஆற்றல் அரசாங்கத்திற்கு இல்லாதிருக்கவேண்டும், அல்லது அத்தகைய ஆற்றல் இருந்தும் அதை அரசாங்கம் உபயோகப்படுத்தாமலிருந்திருக்கவேண்டும். முதல்காரணம் உண்மையானல் இது ஒரு திறமையற்ற அரசாங்கம் என்று ஏற்படும் இரண்டாவது காரணம் சரியானல், கள்ளமார்க்கட்காரர்களை ஆதரித்து மக்களுக்குத் துரோகம் செய்கிறது இந்த அரசாங்கம் என்று பொருள்படும். பதுக்கப்பட்ட பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வெளிக்கொண்டு வருவதைவிட உணவுப்பொருள்களைப் பதுக்கப்படாமல் பாதுகாக்கவேண்டும். பதுக்குவது என்பது முடியாத காரியமாகச் செய்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். அவ்வாறு செய்வதிலும், சட்டத்தின் வாசகங்கள் மட்டுமல்ல, சர்க்காரின் திறமையான நிர்வாகமும் முக்கியமாகத் தேவைப்படும்.

குதிரையை ஓடவிட்டுப் பின்தேடியலைவதை விட குதிரை ஓடிப்போகாமல் முதலில் பாதுகாத்துக்கொள்வது எவ்வளவு நல்லதோ, அதைப்போல உணவுப்பொருள்களை பதுக்க விட்டு பின் அவற்றின் மீது விலை நிர்ணயம் செய்து பிடித்துக்கொண்டு வரமுயலுவதை விட அவை பதுங்காமல் பாதுகாப்பது நல்லது. அது கடினமான காரியமென்ருலும், அது அரசாங்கத்தின் நீங்காக்கடமையாகும். பற்ருக்குறை ஏற்படும் சமயங்களில் அரசாங்கத்தின் திறமையற்ற போக்கால் பஞ்சம் உண்டாகும். அவ்வாறு பஞ்சநிலை உண்டாகாது அரசாங்கம் முன்கூட்டியே திறமையுடன் செயலாற்றவேண்டும், மக்களும் விழிப்பாக இருக்கவேண்டும்.

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

வினா: 12-5-57இல் பெங்களூரில் நடைபெற்ற கத்தோலிக்கர் மாநாட்டில் பேசிய தோழர் சி. ம. விசுவாசம் பாதிரியார் "செந்தமிழ் நாடு என்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாரதியார் பாட்டைக் குறிப்பிட்டு "தேன் வாயில் பாய்ந்தால் தான் தேனின் ருசிகை அறியமுடியுமே ஒழிய இன்பத்தேன் வந்து காதில் பாய்ந்தால் காது எப்படி ருசியை அறியமுடியும்? இப்படியும் இந்த நாட்டில் இருந்த கவியைச் சீர்திருத்தக் கவி என்று போற்றுகின்றனரே!" என்று பாரதியாரை இழித்துக் கூறுகின்றனரே, அது பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: உலகிலுள்ள சீர்திருத்தக் கவிஞர்களையும், சீர்திருத்தச் செம்மல்களையும் எவ்வளவு தொலைவு இழிச்சொற்களாலும், பழிச்சொற்களாலும், வசைச் சொற்களாலும் மிக மிகத் தாக்கிப் பேசியும் எழுதியும் வரமுடியுமோ அவ்வளவு தொலைவு பேசியும், எழுதியும் வருவதற்கு ஒரு பாதிரியார் இப்பொழுது கிளம்பியுள்ளார் அவர்தான் தோழர் சி. ம். விசுவாசம் பாதிரியார் ஆவார்.

ஏசுவால் இடையறாது போதிக்கப்பட்ட அன்பு, அருள், அறம், அடக்கம் ஆகிய பண்புகளை, ஏசுவின் தொண்டர் பரம்பரையிலே வந்தவர்களிலே சிலர் விட்டு விட்டார்கள் என்பதற்கு, இற்றைப்பொழுது ஒரு எடுத்துக்காட்டு வேண்டுமானால், அதற்குரியவராகத் தம்மை முழுக்க முழுக்க ஆக்கிக்கொண்டிருப்பவர் தோழர் விசுவாசம் பாதிரியார் ஆவார்.

பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞராக விளக்கி, சிலபல சீர்திருத்தக் கருத்துக்களைச் செப்பியிருக்கிறார் என்பதற்காக, வினாவில் கண்டுள்ளபடி அவரை இழித்துக்கூற முற்பட்டுள்ளார் பரிதாபத்திற்குரிய பாதிரியார்.

பாதிரியார் முடைநாற்றம் வீசும் சேற்றை அள்ளி பாரதியார் மீது வீசப்பார்க்கிறார்; ஆனால் அந்தச் சேறு பாரதியார்மீது படாமல் பாதிரியார் மீதே சிதறி விழுகிறது.

'ஆத்திரக்காரனுக்குப்புத்தி மட்டு' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஒரு இலக்கியம் காண வேண்டுமானால், தோழர் விசுவாசம் பாதிரியாரே அதற்கு எடுத்துக்காட்டாக விளக்குகிறார்.

பாரதியார் பாடியதில், இலக்கணப்படி குற்றம் ஏதும் இல்லை என்பதைப் பாதிரியாரும், அவர் போன்றாரும் இனியேனும் உணர்ந்து கொள்வார்களாக!

தமிழ் இலக்கணத்தில் ஆகு பெயர் என்று ஒருவகை உண்டு. ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புள்ள பிறிதொரு பொருளுக்கு ஆகி வருமேயானால், அந்தப்பெயர் ஆகுபெயர் என்று அழைக்கப்படும். எடுத்துக்காட்டாக: 'பொங்கல் உண்டான்' என்ற சொற்றொடரைக்கவனிப்போம். பொங்கல் என்பதற்குப் பொங்குதல் என்று பொருள். பொங்குதல் என்பது தொழிலின் பெயரே ஒழிய ஒரு பருப்பொருளின் பெயரல்ல. ஆனால் பொங்கல் உண்டான் என்று சொல்லும்போது பொங்கல் என்னும் ஒருவகை உணவை உண்டான் என்று சொல்கிறோம். 'பொங்கல்' என்னும் ஒருவகைத் தொழிலின் பெயர் அத்தொழிலினால் ஏற்படும் ஒருவகை உணவைப் 'பொங்கல்' என்று உணர்த்தி நிற்பதால், இதனை ஆகுபெயர் என்று சொல்லுவர் அறிவுடையோர். ஒரு தொழிலின் பெயர் ஒரு பொருளுக்கு ஆகிவந்தால் இதனைத் தொழிலாகுபெயர் என்று பிரித்து உணர்த்துவர். இப்படி ஆகுபெயரை பதினாறு வகையாகப் பிரித்துக் கூறுவார்கள் இலக்கண ஆசிரியர்கள். அவையாவன: (1) பொருளாகு பெயர் (முதலாகு பெயர்) (2) இடலாகுபெயர், (3) காலவாகு பெயர், (4) சினையாகு பெயர், (5) பண்பாகு பெயர், (6) தொழிலாகு பெயர், (7) எண்ணலளவையாகு பெயர், (8) எடுத்தலளவையாகு பெயர், (9) முகத்தலளவையாகுபெயர், (10) நீட்டலளவையாகு பெயர், (11) சொல்லாகு பெயர், (12) தானியாகுபெயர், (13) கருவியாகு பெயர், (14) காரியவாகு பெயர், (15) கருத்தாவாகு பெயர், (16) உவமையாகு பெயர் என்பனவாகும்.

இங்கு பதினாறாவது ஆகுபெயராகக் குறிப்பிடபப்ட்டிருக்கும் உவமையாகு பெயராகத்தான் 'இன்பத்தேன்' என்ற சொற்றொடரைப் பாரதியார் பயன் படுத்துகிறார். 'இன்பத்தேன்' என்னும்போது 'இன்பத்தேன்போன்று இனிமை பயக்கும் சொற்கள்' என்று பொருள் கொள்வர் தெளிவறிவு படைத்தோர். 'இன்பத்தேன்' என்ற பெயர் அதனைப்போன்று இனிமை பயக்கும் சொற்களுக்கு ஆகி வந்தமையால், இதனை உவமையாகு பெயர் என்பர் அறிவுடையோர். "இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் குறிப்பிடுகிறார் என்றால், "இள்பத்தேன் போன்று உள்ளத்திற்கு இனிமை பயக்கும் இனிய சொல்லோசை வந்து பாயுது காதினிலே" என்பதைச் செய்யுளழகு தோன்ற இலக்கண முறைப்படி அப்படி உணர்த்துகிறார் என்று பொருள். இதனை நன்கு அறிந்துகொள்ள மாட்டாத விசுவாசம் பாதிரியார், தம்அறியாமை தோன்ற உளறிக் கொட்டி அவதியுறுகிறார்.

'காளை வந்தான்' என்று ஒரு சொற்றொடர் காணப்படுகிறது என்றால், காளைபோன்று எடுப்பும், பெரு மிதமும், பீடு நடையும் கொண்ட ஒரு ஆடவன் வந்தான் என்றுதான் பொருள் கொள்வார்களேயொழிய காளைபோன்று நான்கு கால்களும், ஒரு வாலும், இரண்டு கொம்பும், ஒரு திமிலும், தொங்கும் தாடையும் கொண்ட ஆடவன் எங்கே என்று நல்லறிவு படைத்தவர் யாரும கேட்கமாட்டார்கள். ஆனால் அப்படிக் கேட்கக் கூடிய ஒருவர் விசுவாசம் என்ற பெயரில் பாதிரியார் கூட்டத்தில் இருக்கிறார் என்று இப்பொழுது தெரிகிறது. 'காளை' என்று குறிப்பிட்டு விட்டதால், ஒருவனுக்கு இரண்டு கொம்பும், ஒரு வாலும், நான்கு கால்களும், பிறவும் இருந்து தீரவேண்டுமே, அவை இல்லாதவனைக் 'காளை' என்று எப்படி அழைப்பது என்று எவரேனும் கேட்டால், அப்படிப்பட்டவரை எத்தகைய பட்டியலில் சேர்ப்போமோ, அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவராகத் தான் தோழர் விசுவாசம் பாதிரியார் காட்சி யளிக்கிறார்:

'செந்தமிழ் நாடு' என்று சொல்லிவிட்டால் இன்பத் தேன் எங்கிருந்து கசியும்? எப்படிக் கசியும்? எப்படி வெள்ளமாக மாறும்? அது எங்கிருந்து எப்படிக் காதில் பாயும்? பாய்ந்தால் காது எப்படி அதன் ருசியை அறியும்? என்பன போன்ற வினாக்களை எழுப்ப பாதிரியார் கூட்டத்திலே ஒருவர் தோன்றியிருப்பது வியப்புக்குரியதாகத்தானிருக்கிறது.

'தேன்' நாக்கில் பட்டால் உள்ளத்தில் எப்படிப்பட்ட இன்பத்தை எழுப்புகின்றதோ, அப்படிப்பட்ட இன்பத்தைக் காதில் வந்து விழும் 'செந்தமிழ் நாடு' என்ற சொல் எழுப்புகிறது என்பதைத் தான் பாரதியார் அழகிய செய்யுள் நடையில் குறிப்பிடுகிறார். 'செந்தமிழ்' என்று சொல்லும்போது, "தமிழ் சிவப்பாகவா இருக்கும்?" என்று விசுவாசம் பாதிரியார் கேட்கத் தொடங்கினால் கூட நாம் வியப்படைவதற்கில்லை. அவரது அறிவு இருந்தவாறு அவ்வளவு தான்!

ஒரு பொறியின் தன்மையை மற்றொரு பொறிக்கு ஏற்றிச் சொல்லுவது செய்யுள் வழக்கில் புலவரின் நயப்பாடுகளிலே ஒன்றாகக் கருதப்படும். சுவைத்தல் என்பது நாக்கின் தொழிலேயல்லாமல் செவியின் தொழிலல்ல. ஆனால் வாய் சுவைப்பதைப் போலவே செவியும் சுவைக்கிறது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். "செவி எப்படிச் சுவைக்கும்? நாக்குதானே சுவைக்கும்?" என்று விசுவாசம் பாதிரியார் கேட்டாலும் கேட்பார். அவரைப் போன்றாரை உள்ளத்திற் கொண்டுதானோ, "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்று கூட கருதவேண்டியிருக்கிறது.

குற்றம் பாரதியார் அறிவின் மீது இல்லை; பாதிரியாரின் அறியாமை மீது தான் அமைந்து கிடக்கிறது என்பதைப் பாதிரியார் இனியேனும் உணருவாராக!

—இரா. [illegible]

சென்னைக் கைத்தறிகளின் எண்ணிக்கை!

1957 மார்ச் மாத இறுதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்தியா பூராவிலும் மொத்தம் 8,92,940 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் சென்னை மாநிலத்தில்மட்டும் 4,32,603, கைத்தறிகள் உள்ளன.

உத்தரப் பிரதேசம் இரண்டாவதாக இருக்கிறது. அங்கு 2,32.475 கைத்தறிகள் பதிவாகியுள்ளன. பீகாரில் 68,485 தறிகளும், பம்பாயில் 50,120 தறிகளும் உள்ளன.

கூட்டுறவு முறையில் உள்ள கைத்தறிகளை நீக்கி தனிப்பட்ட முறையில் உள்ளவற்றைமட்டுமே பதிவுக் கணக்கில் சேர்த்துள்ளனர்.

அரசாங்கம் தந்துள்ள கணக்கில், இந்தியாவிலுள்ளவற்றில் ஏறத்தாழ பாதியளவு கைத்தறிகள் சென்னை மாநிலத்தில் பதிவாகியுள்ளன. கைத்தறி பிரச்சினை சென்னை மாநிலத்தை ஒட்டிய முக்கியப் பிரச்சினையாகும்.

சிறுகதை—(சென்ற இதழின் தொடர்ச்சி) ஆ. [illegible] அண்ணாமலையின்

காதற் பரிட்சை!

குமுதா கடிதத்தைத் தேடிக் கொண்டிருந்த சமயம், அந்தக் கடிதம் எதிர்வரிசையிலிருந்த கோடி அறையில் பத்துப் பெண்கள் மத்தியிலிருந்தது அந்தக் கடிதத்தைக் கேட்க அவர்கள் கூடியிருந்தார்கள்.

"காதற்கடிதம் ஒன்று வந்திருக்கிறது."

"அப்படியா?"

"அதற்குள் ஆ வென்று ஆச்சரியப்படாதே! உனக்கு இல்லையடி!"

"அது போதும் கேலி! யாருக்கு வந்தது?"

"உஸ், சத்தம் போடாதே! சரசா அறைக்கு வா படிக்கப் போகிறோம்!"

"இதோ! வந்துவிட்டேன்"

காதற்கடிதமென்றால் ஒரே பரபரப்பு!

"உண்மையாகவா? காதற் கடிதமா?"

"ஆமாம்!"

"என்ன எழுதியிருக்கிறது, யார் எழுதியது?"

"சத்தம் போடாதே! சரசா அறைக்குவா படிக்கப் போகிறோம்!"

"இரு! காஞ்சனாவையும் கூப்பிட்டுக்கொள்ளலாம! அப்புறம் அவளைக் கூப்பிடாமல் போனதற்கு நான்குநாள் பேசமாட்டாள்!"

சரசா கூட்டங் கூடாது என்று சொல்லி இருக்கிறாள். உனக்கு மட்டும் நான் சொன்னேன்! வா போகலாம்!"

வரிசையாக சரசா அறையில் போய் உட்கார்ந்தார்கள்.

குமுதாவிடமிருந்து சரசா ஒரு புத்தகம் வாங்கி வந்து படிக்கஆரம்பித்திருக்கிறாள். புத்தகத்தைத் திறந்ததும் அதனுள்ளிருந்து கடிதம் கீழே விழுந்தது. புத்தகத்தை அப்படியே மூடிவைத்து, கடிதத்தை முதலில் படிக்க ஆரம்பித்தாள். பின் சரசா தன்னுடைய சிநேகிதி மாலதியிடம் சொன்னாள். அப்படிச் சொல்லும் பொழுது கூட "இரகசியமாக வைத்திரு! காபி சாப்பிட்டதும் என் அறைக்குவா! கடிதத்தைப் படித்துக் காட்டுகிறேன்! உனக்கு மட்டும்தான்!" என்று மாலதியிடம் சொல்லியிருந்தாள். மாலதி தன்னுடன் படிக்கும் சுகுணாவிடம் "உனக்கு மட்டும் தான்!" என்று எல்லாவற்றையும் சொல்லி, சரசாவின் அறைக்கு வரும்படி செய்தாள். சுகுணா அவள் பங்குக்கு "உனக்கு மட்டும் தான் சொல்கிறேன்!" என்று அவள் சிநேகிதி சரசாவிடம் சொன்னாள். சரளா சுந்தரியிடம் சொன்னாள். சுந்தரி கனகம்மாவிடம் சொன்னாள். இப்படி ஒவ்வொருவரும் மற்றும் ஒருவருக்கு மட்டும், பத்து நிமிடங்களுக்குள் பத்து பேருக்கு மேல் மிகுந்த ஆவலுடன் சரசா அறையில் கூடி விட்டார்கள்.

சரசா கனைத்துக்கொண்டாள். மற்றவர்களும் கனைத்துக்கொண்டார்கள். படிப்பது சரசா மட்டுமென்றாலும், எல்லோருக்கும் படிப்பது போன்ற பாவனை. படிப்பவருடன் அந்த அளவு ஒத்துழைப்பு! ஒரு முறைக் கூடியிருப்பவர்களைப் பார்த்துவிட்டு சரசா படிக்க ஆரம்பித்தாள்!

"கண்ணே! என் கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொண்ட குமுதமே!"

"என்ன, என்ன?" ஒருத்தி கேட்டாள்

"நான் படிக்கும் பொழுது யாரும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது!" சரசா உத்தரவிட்டாள்.

"சரி, சரி! மேலே படி"

காலை மலர்ந்ததும், கதிரவனின் பொன்னிறக் கரங்கள் தட்டி எழுப்பியதும், ஓடையில் உறங்கிடும் குமுத மலரான் கண் விழித்து; இதழ் மலர்ந்து, நாணத்தால் சிவந்து, காதலால் மகிழ்ந்து, அண்ணாந்து பார்த்து காதலை, தன் காதலனை அழைப்பாள்; பண்ணிசைத்துப் பாடுவாள்; குளிர் தென்றலில் ஆடுவாள்! அது போல் குமுதாவே! காதல் மலர்ந்து, காதலின் மெல்லிய கரங்கள் தட்டி எழுப்பும்போது கண்விழித்துப் பாராயோ? இதழ் மலர்ந்து ஒரு சொல் பேசாயோ!"

சரசா சற்று நிறுத்தினாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. அதிலிருந்த நீண்ட வாக்கியங்களைப் படிப்பது சிரமமாக இருந்தது. கூட்டத்தில் படிப்பதற்கு முன் அவள் தயாராக நாலைந்து தடவைகள் படித்து வைத்திருந்ததால் தட்டுத்தடங்கல் அதிகமில்லாமல் படிக்க முடிந்தது.

"நன்றாகத்தான் எழுதியிருக்கிறது!"

"இவ்வளவு நன்றாக அந்தப் பையனுக்கு எழுதத் தெரியுமா?"

"யாருக்கு சுந்தரத்துக்கா?",

"எங்கேயாவது உருப்போட்டு, எழுதியிருப்பான்!"

"சரி மேலே படி!"

சரசா ஆரம்பித்தாள். "உன்னைப் பார்க்காமல் ஒரு நாளும் இருக்க முடியவில்லை, உன்னை நினைக்காமல் ஒருகணமுமிருக்க முடியாது. எழுதவொண்ணா நல் ஓவியமே! இசைக்கவொண்ணா நறுங்கவிதையே! உன்னை நான் மானென்று விளிப்பதா? மயிலென்று சொல்வதா? இல்லை மாடத்து மணிப்புறு என்று அழைப்பதா?"

"நீலக்குயில்! நீலக்குயில்!!" சுகுணா சத்தம் போட்டாள். "காப்பி காப்பி" என்று மற்றவர்கள் எதிரொலித்தார்கள்.

கதவு தட்டும் சப்தம் கேட்டது. சமயத்தில் வார்டன் கல்யாணி இதுமாதிரி வந்து "ஏன் கூட்டம்? என்ன சத்தம்?" என்று விரட்டிப்பார்ப்பார்கள். சரசா கடிதத்தை மேஜைமேல் மறைத்துவைத்து மெதுவாக வந்தாள். மற்ற பெண்கள் தலைக்கொரு புத்தகத்தை எடுத்துவைத்து படித்துக்கொண்டிருக்கும் பாவனையில் இருந்தார்கள். வார்டன் என்றால் எல்லோருக்கும் பயம்தான். அதிலும் அந்த நேரத்தில்-காலை பத்துமணிக்கு ஒரு மூச்சு சுற்றிப் பார்த்து விட்டு அவர்கள் போவது வழக்கம்.

சரசா கதவைத் திறந்தாள். வார்டன் கல்யாணி அல்ல, வம்பளக்கும் "கீச்சு" அது தான் காஞ்சனா வந்து நின்றாள்.

"நீதானா?" என்று எல்லோரும் புத்தகத்தை வீசியெறிந்தார்கள்.

"ஆமாம் இவ்வளவு பேரும் என்ன செய்கிறீர்கள்!"

அவள் கேட்பதை யாரும் லட்சியம் செய்யவில்லை. "நீ படி!" சரசாவுக்குப் பக்கத்தில் எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"எதை?"

"எதையா? பாட்டனி நோட்சு! நீபோ! சரசா படி!"

அவர்கள் சொல்வது பொய் யென்று தெரிந்து காஞ்சனா நின்றாள். "என்ன அது?" பக்கத்திலிருந்தவளை அவள் கேட்டாள்.

"காதற் கடிதம்?"

"யாருக்குச் சரசாவுக்கா?" கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். சரசாவுக்குக் கோபம் வந்தது. "எல்லோரும் போய் விடுங்கள்! நான் படிக்கவேண்டும்!" என்று கடிதத்தை மூடினாள்.

மற்றவர்கள் அவளைச் சமாதானப் படுத்தினார்கள்.

"என்னைவிட்டுவிட்டு, நீங்கள் மாத்திரம் படிப்பதா? முதலிலிருந்து படியுங்கள்" என்று காஞ்சனா கேட்டுக் கொண்டாள். காஞ்சனாவின் வேண்டுகோள் பலருக்குச் சரியானதாகப் பட்டது. "பாவம் அவளுக்காக முதலிலிருந்து ஒரு தடவைப் படித்து விடு!" என்று பரிவுடன் சொன்னார்கள். உண்மையில் மறுபடியும் ஒரு தடவைக் கேட்கவேண்டுமென்று அவர்கள் அனைவரும் விரும்பினார்கள். சரசா மறுபடியும் படித்தாள், முன்பு படித்ததை விட அதிக நயத்துடன்!

கடைசியாக "காதல் தான் இனி எனது உலகம், எனது வாழ்வு, எனது உயிர் காதல் போயின் சாதல் தான்! இப்படிக்கு உன் காதலை என்றும் மறவாத சுந்தரம்" என்று கடிதம் முடிந்தது,

"அப்படியானால் இதற்கு முன் இருவரும் சந்தித்திருக்கிறார்களா? கடிதங்கள் எழுதியிருக்கிறார்களா?"

"எழுதியிருக்கவேண்டும்."

"முன்பின் தெரியாதவர்களாயிருந்தால், இவ்வளவு உரிமையுடன் அவன் எழுதுவானா?"

"டிசம்பர் லீவுக்கு முன்னமேயே இருவர்களுக்கும் தெரியுமாம்"

"லீவு விட்ட பிறகும் இருவரும் ஒரே ரயிலில் வந்தார்களாம்!"

"கல்லூரி திறப்பதற்கு முதல் நாள் வருகிற இரயிலில் எல்லோரும் வருகிறார்கள்! அதை வைத்துக்கொண்டு நாம் சொல்லக்கூடாது."

மாணவிகள் கூடி தங்களுக்குள்ளாக கேள்வி-பதில் போட்டுப் பேசிக் கொண்டார்கள். வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி கடிதம் கிடைத்து விட்டது. காஞ்சனா அந்தக் கடிதத்தை வாங்கி மறுபடியும் படித்தாள். கடிதத்தைப் படித்து முடிந்ததும், "ஐயோ! காதலே!" என்று ஒருத்தி கேலி செய்தாள். மற்றவர்கள் சிரித்தார்கள்.

மேஜை மேல் உட்கார்ந்திருந்த சரசா சிரிப்பை அடக்கி, கீழே குதித்து நின்றாள். மற்றவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். சிரிப்பு திடீரென்று அடங்கி விட்டது. கதவைத் திறந்துகொண்டு வார்டன் கல்யாணி நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் படித்து சத்தம் போட்டதையெல்லாம் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணாக வெளியே சென்றார்கள். காஞ்சனா போகும்பொழுது, கல்யாணி தடுத்து, கையை நீட்டினார்கள். காஞ்சனா தன்கையில் மறைத்து வைத்திருந்த கடிதத்தைப் போட்டுவிட்டு ஓடிவிட்டாள் கடிதத்தை எடுத்துக்கொண்டு, வார்டன் சென்று விட்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் குமுதாவைத் தேடி ஆயா வந்தாள். குமுதா கல்லூரி நூல் நிலையத்துக்குப் போயிருப்

வினா: 12-5-57இல் பெங்களூரில் நடைபெற்ற கத்தோலிக்கர் மாநாட்டில் பேசிய தோழர் சி. ம. விசுவாசம் பாதிரியார் "செந்தமிழ் நாடு என்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாரதியார் பாட்டைக் குறிப்பிட்டு "தேன் வாயில் பாய்ந்தால் தான் தேனின் ருசிகை அறியமுடியுமே ஒழிய இன்பத்தேன் வந்து காதில் பாய்ந்தால் காது எப்படி ருசியை அறியமுடியும்? இப்படியும் இந்த நாட்டில் இருந்த கவியைச் சீர்திருத்தக் கவி என்று போற்றுகின்றனரே!" என்று பாரதியாரை இழித்துக் கூறுகின்றனரே, அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: உலகிலுள்ள சீர்திருத்தக் கவிஞர்களையும், சீர்திருத்தச் செம்மல்களையும் எவ்வளவு தொலைவு இழிச்சொற்களாலும், பழிச்சொற்களாலும், வசைச் சொற்களாலும் மிக மிகத் தாக்கிப் பேசியும் எழுதியும் வரமுடியுமோ அவ்வளவு தொலைவு பேசியும், எழுதியும் வருவதற்கு ஒரு பாதிரியார் இப்பொழுது கிளம்பியுள்ளார் அவர்தான் தோழர் சி. ம. விசுவாசம் பாதிரியார் ஆவார்.

ஏசுவால் இடையருது போதிக்கப்பட்ட அன்பு, அருள், அறம், அடக்கம் ஆகிய பண்புகளை, ஏசுவின் தொண்டர் பரம்பரையிலே வந்தவர்களிலே சிலர் விட்டு விட்டார்கள் என்பதற்கு, இற்றைப்பொழுது ஒரு எடுத்துக் காட்டு வேண்டுமானால், அதற்குரியவராகத் தம்மை முழுக்க முழுக்க ஆக்கிக்கொண்டிருப்பவர் தோழர் விசுவாசம் பாதிரியார் ஆவார்.

பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞராக விளக்கி, சிலபல சீர்திருத்தக் கருத்துக்களைச் செப்பியிருக்கிறார் என்பதற்காக, வினாவில் கண்டுள்ளபடி அவரை இழித்துக்கூற முற்பட்டுள்ளார் பரிதாபத்திற்குரிய பாதிரியார்.

பாதிரியார் முடைநாற்றம் வீசும் சேற்றை அள்ளி பாரதியார்மீது வீசப்பார்க்கிறார்; ஆனால் அந்தச் சேறு பாரதியார்மீது படாமல் பாதிரியார் மீதே சிதறி விழுகிறது.

'ஆத்திரக்காரனுக்குப்புத்தி மட்டு' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஒரு இலக்கியம் காணவேண்டுமானால், தோழர் விசுவாசம் பாதிரியாரே அதற்கு எடுத்துக்காட்டாக விளக்குகிறார்.

பாரதியார் பாடியதில், இலக்கணப்படி குற்றம் ஏதும்இல்லை என்பதைப் பாதிரியாரும், அவர் போன்றோரும் இனியேனும் உணர்ந்து கொள்வார்களாக!

தமிழ் இலக்கணத்தில் ஆகுபெயர் என்று ஒருவகை உண்டு. ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புள்ள பிறிதொரு பொருளுக்கு ஆகி வருமேயானால், அந்தப்பெயர் ஆகுபெயர் என்று அழைக்கப்படும். எடுத்துக்காட்டாக: 'பொங்கல் உண்டான்' என்ற சொற்றொடரைக்கவனிப்போம். பொங்கல் என்பதற்குப் பொங்குதல் என்று பொருள். பொங்குதல் என்பது தொழிலின் பெயரே ஒழிய ஒரு பருப்பொருளின் பெயரல்ல. ஆனால் பொங்கல் உண்டான் என்று சொல்லும்போது பொங்கல் என்னும் ஒருவகை உணவை உண்டான் என்று சொல்கிறோம். 'பொங்கல்' என்னும் ஒருவகைத் தொழிலின் பெயர் அத்தொழிலினால் ஏற்படும் ஒருவகை உணவைப் 'பொங்கல்' என்று உணர்த்தி நிற்பதால், இதனை ஆகுபெயர் என்று சொல்லுவர் அறிவுடையோர். ஒரு தொழிலின் பெயர் ஒரு பொருளுக்கு ஆகிவந்தால் இதனைத் தொழிலாகுபெயர் என்று பிரித்து உணர்த்துவர். இப்படி ஆகுபெயரை பதினாறு வகையாகப் பிரித்துக் கூறுவார்கள் இலக்கண ஆசிரியர்கள். அவையாவன: (1) பொருளாகு பெயர் (முதலாகு பெயர்) (2) இடலாகுபெயர், (3) காலவாகு பெயர், (4) சினையாகு பெயர், (5) பண்பாகு பெயர், (6) தொழிலாகு பெயர், (7) எண்ணலளவையாகு பெயர், (8) எடுத்தலளவையாகு பெயர், (9) முகத்தலளவையாகுபெயர், (10) நீட்டலளவையாகு பெயர், (11) சொல்லாகு பெயர், (12) தானியாகுபெயர், (13) கருவியாகு பெயர், (14) காரியவாகு பெயர், (15) கருத்தாவாகு பெயர், (16) உவமையாகு பெயர் என்பனவாகும்.

இங்கு பதினாறுவது ஆகுபெயராகக் குறிப்பிடபப்ட்டிருக்கும் உவமையாகு பெயராகத்தான் '**இன்பத்தேன்**' என்ற சொற்றொடரைப் பாரதியார் பயன் படுத்துகிறார். '**இன்பத்தேன்**' என்னும்போது '**இன்பத்தேன்போன்று இனிமை பயக்கும் சொற்கள்**' என்று பொருள் கொள்வர் தெளிவறிவு படைத்தோர். 'இன்பத்தேன்' என்ற பெயர் அதனைப்போன்று இனிமை பயக்கும் சொற்களுக்கு ஆகி வந்தமையால், இதனை உவமையாகு பெயர் என்பர் அறிவுடையோர். "இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் குறிப்பிடுகிறார் என்றால், "இள்பத்தேன் போன்று உள்ளத்திற்கு இனிமை பயக்கும் இனிய சொல்லோசை வந்து பாயுது காதினிலே" என்பதைச் செய்யுளழகு தோன்ற இலக்கண முறைப்படி அப்படி உணர்த்துகிறார் என்று பொருள். இதனை நன்கு அறிந்துகொள்ள மாட்டாத விசுவாசம் பாதிரியார், தம்அறியாமை தோன்ற உளறிக் கொட்டி அவதியுறுகிறார்.

'காளை வந்தான்' என்று ஒரு சொற்றொடர் காணப்படுகிறது என்றால், காளைபோன்று எடுப்பும், பெரு மிதமும், பீடு நடையும் கொண்ட ஒரு ஆடவன் வந்தான் என்றுதான் பொருள் கொள்வார்களே யொழிய காளைபோன்று நான்கு கால்களும், ஒரு வாலும், இரண்டு கொம்பும், ஒரு திமிலும், தொங்கும் தாடையும் கொண்ட ஆடவன் எங்கே என்று நல்லறிவு படைத்தவர் யாரும கேட்கமாட்டார்கள். ஆனால் அப்படிக் கேட்கக் கூடிய ஒருவர் விசுவாசம் என்ற பெயரில் பாதிரியார் கூட்டத்தில் இருக்கிறார் என்று இப்பொழுது தெரிகிறது. 'காளை' என்று குறிப்பிட்டு விட்டதால், ஒருவனுக்கு இரண்டு கொம்பும், ஒரு வாலும், நான்கு கால்களும், பிறவும் இருந்து தீரவேண்டுமே, அவை இல்லாதவனைக் 'காளை' என்று எப்படி அழைப்பது என்று எவரேனும் கேட்டால், அப்படிப்பட்டவரை எத்தகைய பட்டியலில் சேர்ப்போமோ, அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவராகத் தான் தோழர் விசுவாசம் பாதிரியார் காட்சி யளிக்கிறார்:

'செந்தமிழ் நாடு' என்று சொல்லிவிட்டால் இன்பத் தேன் எங்கிருந்து கசியும்? எப்படிக் கசியும்? எப்படி வெள்ளமாக மாறும்? அது எங்கிருந்து எப்படிக் காதில் பாயும்? பாய்ந்தால் காது எப்படி அதன் ருசியை அறியும்? என்பன போன்ற வினாக்களை எழுப்ப பாதிரியார் கூட்டத்திலே ஒருவர் தோன்றியிருப்பது வியப்புக்குரியதாகத்தானிருக்கிறது.

'தேன்' நாக்கில் பட்டால் உள்ளத்தில் எப்படிப்பட்ட இன்பத்தை எழுப்புகின்றதோ, அப்படிப்பட்ட இன்பத்தைக் காதில் வந்து விழும் 'செந்தமிழ் நாடு' என்ற சொல் எழுப்புகிறது என்பதைத் தான் பாரதியார் அழகிய செய்யுள் நடையில் குறிப்பிடுகிறார். 'செந்தமிழ்' என்று சொல்லும்போது, "தமிழ் சிவப்பாகவா இருக்கும்?" என்று விசுவாசம் பாதிரியார் கேட்கத் தொடங்கினால் கூட நாம் வியப்படைவதற்கில்லை. அவரது அறிவு இருந்தவாறு அவ்வளவு தான்!

ஒரு பொறியின் தன்மையை மற்றொரு பொறிக்கு ஏற்றிச் சொல்லுவது செய்யுள் வழக்கில் புலவரின் நயப்பாடுகளிலே ஒன்றாகக் கருதப்படும். சுவைத்தல் என்பது நாக்கின் தொழிலேயல்லாமல் செவியின் தொழிலல்ல. ஆனால் வாய் சுவைப்பதைப் போலவே செவியும் சுவைக்கிறது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். "செவி எப்படிச் சுவைக்கும்? நாக்கு தானே சுவைக்கும்?" என்று விசுவாசம் பாதிரியார் கேட்டாலும் கேட்பார். அவரைப் போன்றோரை உள்ளத்தில் கொண்டுதானோ, "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்று கூட கருதவேண்டியிருக்கிறது.

குற்றம் பாரதியார் அறிவின் மீது இல்லை; பாதிரியாரின் அறியாமை மீது தான் அமைந்து கிடக்கிறது என்பதைப் பாதிரியார் இனியேனும் உணருவாராக!

—இரா. [illegible]

சென்னைக் கைத்தறிகளின் எண்ணிக்கை!

1957 மார்ச் மாத இறுதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்தியா பூராவிலும் மொத்தம் 8,92,940 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் சென்னை மாகிலத்தில்மட்டும் 4,32,603, கைத்தறிகள் உள்ளன.

உத்தரப் பிரதேசம் இரண்டாவதாக இருக்கிறது. அங்கு 2,32.475 கைத்தறிகள் பதிவாகியுள்ளன. பீகாரில் 68,485 தறிகளும், பம்பாயில் 50,120 தறிகளும் உள்ளன.

கூட்டுறவு முறையில் உள்ள கைத்தறிகளை நீக்கி தனிப்பட்ட முறையில் உள்ளவற்றைமட்டுமே பதிவுக் கணக்கில் சேர்த்துள்ளனர்.

அரசாங்கம் தந்துள்ள கணக்கில், இந்தியாவிலுள்ளவற்றில் ஏறத்தாழ பாதியளவு கைத்தறிகள் சென்னை மாகிலத்தில் பதிவாகியுள்ளன. கைத்தறி பிரச்சினை சென்னை மாகிலத்தை ஒட்டிய முக்கியப் பிரச்சினையாகும்.

சிறுகதை—(சென்ற இதழின் தொடர்ச்சி) [illegible]

காதற் பரிட்சை!

குமுதா கடிதத்தைத் தேடிக் கொண்டிருந்த சமயம், அந்தக் கடிதம் எதிர்வரிசையிலிருந்த கோடி அறையில் பத்துப் பெண்கள் மத்தியிலிருந்தது அந்தக் கடிதத்தைக் கேட்க அவர்கள் கூடியிருந்தார்கள்.

"காதற்கடிதம் ஒன்று வந்திருக்கிறது."

"அப்படியா?"

"அதற்குள் ஆ வென்று ஆச்சரியப்படாதே! உனக்கு இல்லையடி!"

"அது போதும் கேலி! யாருக்கு வந்தது?"

"உஸ், சத்தம் போடாதே! சரசா அறைக்கு வா படிக்கப் போகிறோம்!"

"இதோ! வந்துவிட்டேன்"

காதற்கடிதமென்றால் ஒரே பரபரப்பு!

"உண்மையாகவா? காதற் கடிதமா?"

"ஆமாம்!"

"என்ன எழுதியிருக்கிறது, யார் எழுதியது?"

"சத்தம் போடாதே! சரசா அறைக்குவா படிக்கப் போகிறோம்!"

"இரு! காஞ்சனாவையும் கூப்பிட்டுக்கொள்ளலாம! அப்புறம் அவளைக் கூப்பிடாமல் போனதற்கு நான்குநாள் பேசமாட்டாள்!"

சரசா கூட்டங் கூடாது என்று சொல்லி இருக்கிறாள். உனக்கு மட்டும் நான சொன்னேன்! வா போகலாம்!"

வரிசையாக சரசா அறையில் போய் உட்கார்ந்தார்கள்.

குமுதாவிடமிருந்து சரசா ஒரு புத்தகம் வாங்கி வந்து படிக்கஆரம்பித்திருக்கிறாள். புத்தகத்தைத் திறந்ததும அதனுள்ளிருந்து கடிதம் கீழே விழுந்தது. புத்தகத்தை அப்படியே மூடிவைத்து, கடிதத்தை முதலில் படிக்க ஆரம்பித்தாள். பின் சரசா தன்னுடைய சிநேகிதி மாலதியிடம் சொன்னாள். அப்படிச் சொல்லும் பொழுது கூட "இரகசியமாக வைத்திரு! காபி சாப்பிட்டதும் என் அறைக்குவா! கடிதத்தைப் படித்துக் காட்டுகிறேன்! உனக்கு மட்டும்தான்!" என்று மாலதியிடம் சொல்லியிருந்தாள். மாலதி தன்னுடன் படிக்கும் சுகுணாவிடம் "உனக்கு மட்டும் தான்!" என்று எல்லாவற்றையும் சொல்லி, சரசாவின் அறைக்கு வரும்படி செய்தாள். சுகுணா அவள் பங்குக்கு "உனக்கு மட்டும் தான் சொல்கிறேன்!" என்று அவள் சிநேகிதி சரசாவிடம் சொன்னாள். சரளா சுந்தரியிடம் சொன்னாள். சுந்தரி கனகம்மாவிடம் சொன்னாள். இப்படி ஒவ்வொருவரும் மற்றும் ஒருவருக்கு மட்டும், பத்து நிமிடங்களுக்குள் பத்து பேருக்கு மேல் மிகுந்த ஆவலுடன் சரசா அறையில் கூடிவிட்டார்கள்.

சரசா கனைத்துக்கொண்டாள். மற்றவர்களும் கனைத்துக்கொண்டார்கள். படிப்பது சரசா மட்டுமென்றாலும், எல்லோருக்கும் படிப்பது போன்ற பாவனை. படிப்பவருடன் அந்த அளவு ஒத்துழைப்பு! ஒருமுறைக் கூடியிருப்பவர்களைப் பார்த்துவிட்டு சரசா படிக்க ஆரம்பித்தாள்!

"கண்மணி! என் கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொண்ட குமுதமே!"

"என்ன, என்ன?" ஒருத்தி கேட்டாள்

"நான் படிக்கும் பொழுது யாரும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது!" சரசா உத்தரவிட்டாள்.

"சரி, சரி! மேலே படி"

காலை மலர்ந்ததும், கதிரவனின் பொன்னிறக் கரங்கள் தட்டி எழுப்பியதும், ஓடையில் உறங்கிடும் குமுத மலரான் கண் விழித்து: இதழ் மலர்ந்து, நாணத்தால் சிவந்து, காதலால் மகிழ்ந்து, அண்ணாந்து பார்த்து காதலை, தன் காதலனை அழைப்பாள்; பண்ணிசைத்துப் பாடுவாள்; குளிர் தென்றலில் ஆடுவாள்! அது போல் குமுதாவே! காதல் மலர்ந்து, காதலின் மெல்லிய கரங்கள் தட்டி எழுப்பும்போது கண்விழித்துப் பாராயோ? இதழ் மலர்ந்து ஒரு சொல் பேசாயோ!"

சரசா சற்று நிறுத்தினாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. அதிலிருந்த நீண்ட வாக்கியங்களைப் படிப்பது சிரமமாக இருந்தது. கூட்டத்தில் படிப்பதற்கு முன் அவள் தயாராக நாலைந்து தடவைகள் படித்து வைத்திருந்ததால் தட்டுத்தடங்கல் அதிகமில்லாமல் படிக்க முடிந்தது.

"நன்றாகத்தான் எழுதியிருக்கிறது!"

"இவ்வளவு நன்றாக அந்தப் பையனுக்கு எழுதத் தெரியுமா?"

"யாருக்கு சுந்தரத்துக்கா?"

"எங்கேயாவது உருப் போட்டு, எழுதியிருப்பான்!"

"சரி மேலே படி!"

சரசா ஆரம்பித்தாள். "உன்னைப் பார்க்காமல் ஒரு நாளும் இருக்க முடியவில்லை, உன்னை நினைக்காமல் ஒருகணமுமிருக்க முடியாது. எழுதவொண்ணா நல் ஓவியமே! இசைக்கவொண்ணா நறுங்கவிதையே! உன்னை நான் மானென்று விளிப்பதா? மயிலென்று சொல்வதா? இல்லை மாடத்து மணிப்புறா என்று அழைப்பதா?"

"நீலக்குயில்! நீலக்குயில்!!" சுகுணா சத்தம் போட்டாள். "காப்பி காப்பி" என்று மற்றவர்கள் எதிரொலித்தார்கள்.

கதவு தட்டும் சப்தம் கேட்டது. சமயத்தில் வார்டன் கல்யாணி இதுமாதிரி வந்து "ஏன் கூட்டம்? என்ன சத்தம்?" என்று விரட்டிப்பார்ப்பார்கள். சரசா கடிதத்தை மேஜைமேல் மறைத்துவைத்து மெதுவாக வந்தாள். மற்ற பெண்கள் தலைக்கொரு புத்தகத்தை எடுத்துவைத்து படித்துக்கொண்டிருக்கும் பாவனையில் இருந்தார்கள். வார்டன் என்றால் எல்லோருக்கும் பயம்தான். அதிலும் அந்த நேரத்தில்-காலை பத்துமணிக்கு ஒரு மூச்சு சுற்றிப் பார்த்துவிட்டு அவர்கள் போவது வழக்கம்.

சரசா கதவைத் திறந்தாள். வார்டன் கல்யாணி அல்ல, வம்பளக்கும் "கீச்சு" அதுதான் காஞ்சனா வந்து நின்றாள்.

"நீதானா?" என்று எல்லோரும் புத்தகத்தை வீசியெறிந்தார்கள்.

"ஆமாம் இவ்வளவு பேரும் என்ன செய்கிறீர்கள்!"

அவள் கேட்பதை -யாரும் லட்சியம் செய்யவில்லை. "நீ படி!" சரசாவுக்குப் பக்கத்தில் எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"எதை?"

"எதையா? பாட்டனி நோட்சு! நீபோ! சரசா படி!"

அவர்கள் சொல்வது பொய் யென்று தெரிந்து காஞ்சனா நின்றாள். "என்ன அது?" பக்கத்திலிருந்தவளை அவள் கேட்டாள்.

"காதற் கடிதம்?"

"யாருக்குச் சரசாவுக்கா?" கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். சரசாவுக்குக் கோபம் வந்தது. "எல்லோரும் போய் விடுங்கள்! நான் படிக்கவேண்டும்!" என்று கடிதத்தை மூடினாள்.

மற்றவர்கள் அவளைச் சமாதானப் படுத்தினார்கள்.

"என்னைவிட்டுவிட்டு, நீங்கள் மாத்திரம் படிப்பதா? முதலிலிருந்து படியுங்கள்" என்று காஞ்சனா கேட்டுக் கொண்டாள். காஞ்சனாவின் வேண்டுகோள் பலருக்குச் சரியானதாகப் பட்டது. "பாவம் அவளுக்காக முதலிலிருந்து ஒரு தடவைப் படித்து விடு!" என்று பரிவுடன் சொன்னார்கள். உண்மையில் மறுபடியும் ஒரு தடவைக் கேட்கவேண்டுமென்று அவர்கள் அனைவரும் விரும்பினார்கள். சரசா மறுபடியும் படித்தாள், முன்பு படித்ததை விட அதிக நயத்துடன்!

கடைசியாக "காதல் தான் இனி எனது உலகம், எனது வாழ்வு, எனது உயிர் காதல் போயின் சாதல் தான்! இப்படிக்கு உன் காதலை என்றும் மறவாத சுந்தரம்" என்று கடிதம் முடிந்தது,

"அப்படியானால் இதற்கு முன் இருவரும் சந்தித்திருக்கிறார்களா? கடிதங்கள் எழுதியிருக்கிறார்களா?"

"எழுதியிருக்கவேண்டும்."

"முன்பின் தெரியாதவர்களாயிருந்தால், இவ்வளவு உரிமையுடன் அவன் எழுதுவானா?"

"டிசம்பர் லீவுக்கு முன்னமேயே இருவர்களுக்கும் தெரியுமாம்"

"லீவு விட்ட பிறகும் இருவரும் ஒரே ரயிலில் வந்தார்களாம்!"

"கல்லூரி திறப்பதற்கு முதல் நாள் வருகிற இரயிலில் எல்லோரும் வருகிறார்கள்! அதை வைத்துக்கொண்டு நாம் சொல்லக்கூடாது."

மாணவிகள் கூடி தங்களுக்குள்ளாக கேள்வி-பதில் போட்டுப் பேசிக் கொண்டார்கள். வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி கடிதம் கிடைத்து விட்டது. காஞ்சனா அந்தக் கடிதத்தை வாங்கி மறுபடியும் படித்தாள். கடிதத்தைப் படித்து முடிந்ததும், "ஐயோ! காதலே!" என்று ஒருத்தி கேலி செய்தாள். மற்றவர்கள் சிரித்தார்கள்.

மேஜை மேல் உட்கார்ந்திருந்த சரசா சிரிப்பை அடக்கி, கீழே குதித்து நின்றாள். மற்றவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். சிரிப்பு திடீரென்று அடங்கி விட்டது. கதவைத் திறந்துகொண்டு வார்டன் கல்யாணி நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் படித்து சத்தம் போட்டதையெல்லாம் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணாக வெளியே சென்றார்கள். காஞ்சனா போகும்பொழுது, கல்யாணி தடுத்து, கையை நீட்டினார்கள். காஞ்சனா தன்கையில் மறைத்து வைத்திருந்த கடிதத்தைப் போட்டுவிட்டு ஓடிவிட்டாள் கடிதத்தை எடுத்துக்கொண்டு, வார்டன் சென்று விட்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் குமுதாவைத் தேடி ஆயா வந்தாள். குமுதா கல்லூரி நூல் நிலையத்துக்குப் போயிருப்ப

தாக அவளுடைய அறையிலிருந்தவள் சொன்னாள்.

ஆயா திரும்பிப்போய் வார்டனிடம் சொன்னாள். "இதை நான் ரிபோர்ட் செய்தாக வேண்டும்" என்று வார்டன் கல்யாணி முணு முணுத்துக் கொண்டாள். தனக்கு வந்த கடிதம் சரசா கையில் சிக்கியதும், பிறகு வார்டனிடம் அது போன விவரமும் குமுதாவுக்குத் தெரியாது. அவள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் கல்லூரி நூல் நிலையத்தில் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தாள். பரிட்சை எழுத இன்னும் இரண்டு மாதங்களிருந்தன. அது முடிந்தால், அப்புறம் கல்லூரி, கல்லூரி விடுதி, எல்லாவற்றுக்கும் ஒரு முழுக்குப் போட்டு, "அக்கடா!" என்று வீட்டில் போய் உட்கார்ந்துவிடலாம். அதுவும் வர வர அறையில் உட்கார்ந்து படிக்க முடிவதில்லை. நிம்மதியாக கால் மணி நேரங்கூட இருக்க மற்ற மாணவிகள் விடுவதில்லை. படிக்கிற பையன்களைப் பற்றி ஏதாவது வம்பளந்து கொண்டு, "அவனைப் பற்றி தெரியுமா?" "இவனைப் பற்றி தெரியுமா?" என்று கேட்டுப் பக்கத்திலிருக்கும் சிநேகிதிகள் நேரத்தை வீணாக்கிவிடுகிறார்கள். அன்று காலை அவள் நூல் நிலயத்துக்குக் கிளம்பும் பொழுது கூட, சரசா வந்து யாரோ ஒரு பையன் சுந்தரமோ மந்திரமோ அவனைப் பற்றி ஏதோ பேச்செடுத்தாள். பரிட்சைக்குப் படிப்பதைவிட்டு எனிப்படி நேரத்தை அவர்கள் வீணாக்குகிறார்கள் என்று அவளுக்குப் புரிய வில்லை.

"சுத்த உதவாக்கரை சட்!" என்று குமுதா சொல்லிக் கொண்டாள். நூல்நிலயத்திலிருப்பதை மறந்து அவள் வாய்விட்டுச் சொல்லிவிட்டாள். எதிரில்உட்கார்ந்து புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பையன் அவன் பெயர் சுந்தரம் என்பது குமுதாவுக்குத் தெரியாது. அவனும் வழக்கம்போல் தொல்லைகொடுக்கும் நண்பர்களிடமிருந்து தப்ப, நூல்நிலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்தான். படித்துக் கொண்டிருந்த அவன், யாரோ சத்தம்போட்டுப் பேசுவது கேட்டுத் திரும்பிப் பார்த்தான். நூல்நிலயத்தின் அமைதியைக் கெடுத்த குற்றவாளி யார் எனப் பார்த்தான். ஒரு பெண். அவள்பெயர் குமுதா என்று அவனுக்குத் தெரியாது—புத்தகத்தை வைத்துக் கொண்டு பேசுவது தெரிந்தது.

தான்பேசியது மற்றவர்கள் காதில் விழுந்துவிட்டதைக் கவனித்த குமுதா, அதிலும் எதிரில் இருந்த ஒருபையன் கேட்டு விட்டதை அவள் கவனித்து "மன்னிக்கவும்!" என்று சொல்லிக்கொண்டு எழுந்தாள்.

"யாரோ, பைத்தியம்!" என்று சுந்தரம் நினைத்துக் கொண்டான்.

குமுதா சிறிது நேரம் இருந்தாள். பெரிய புத்தகங்களை எடுத்துவந்து, அவைகளிலிருந்து, குறிப்புகளை எழுதிக் கொண்டாள், பின் எழுந்து போய்விட்டாள்.

சுந்தரம் தன்பாட்டுக்குப் படித்துக் கொண்டிருந்தான்.

அதிகம் படிக்க படிக்க முதலில் படித்தவைகள் மறந்துவிடும் போலிருந்தது.

"மணியாகிவிட்டது!" என்று வேலைக்காரன் கதவைச் சார்த்த ஆரம்பித்தான்.

சுந்தரம் வெளியே வந்தான். அவனை வரவேற்க சாரங்கன், சத்தி, மணி, மூர்த்தி முதலானவர்கள் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்கள். "இதேது தொல்லையாகிவிட்டது, இங்கேயும் வந்துவிட்டார்களா?" என்று சுந்தரம் நினைத்துக் கொண்டான். சுந்தரம் அவர்களைப் பார்க்காததுமாதிரி நடக்க ஆரம்பித்தான்.

"படிப்பு மிக மும்முரமோ!" என்று சாரங்கன் ஆரம்பித்தான்.

"கதவைச்சார்த்தி வெளியே தள்ளுகிறவரை உட்கார்ந்திருக்கிறானே"

"காதலியைச் சந்திக்கிற தென்றால், நல்லவேலை செய்கிறான்!"

சுந்தரத்துக்குக் கோபம் வந்தது. "இப்படி இல்லாததும் பொல்லாததும் சொல்லி வம்பளக்கிறீர்கள்?" என்றான்.

"ஏண்டா நாங்கள் இல்லாததும் பொல்லாததும் சொல்கிறோமா? சரி இந்நேரம்நீ என்ன செய்தாய்?"

"லைப்ரரியில் இருந்தேன்"

"அது தெரிகிறது. அங்கு யாருடன் பேசிக்கொண்டிருந்தாய்?"

"பேசுவதா? நான் யாருடனும் பேசவில்லையே, படித்துக்கொண்டிருந்தேன்!"

"பொய்யைச் சொன்னாலும், பொருந்தச்சொல்! நாங்களும் தூரத்தில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம்! அந்தப்பெண் குமுதாவுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாயே!"

"யார்?"

"குமுதாவுடன்தான், யாருக்குத் தெரியாதென்று நினைக்கிறாய்! அவளும் உட்கார்ந்து குறிப்பு எடுப்பதுபோல, ஏதேதோ உன்னிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். நீயும் தலையசைத்துக்கொண்டிருந்தாய்!"

அவள்தான் குமுதாவா? சுந்தரம் சரியாகக்கூட அவளைப் பார்க்கவில்லை.

சுந்தரமும் குமுதாவும் சந்தித்தது அன்று இரவு சாப்பாட்டுக்குமுன் மாணவர்களுக்குப் பரவிவிட்டது. நூல்நிலயத்தில் இருவரும் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருந்ததாகச் சிலர் சொன்னார்கள். நூல்நிலயத்தில் அல்ல, நூல் நிலயத்திற்குப் பக்கத்திலிருந்த தோட்டத்தில் பூச்செடிகள் அடர்ந்த இடத்தில் பசும் புல் தரையில் இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாக மற்றும்சிலர் முதலில் வந்த செய்திக்கு காதல்காட்சிக்கேற்ற இடத்தை மாற்றித் தந்தார்கள். பேசிக்கொண்டிருக்கவில்லை, பாடிக்கொண்டிருந்தார்கள் என்று இன்னும் கொஞ்சம் மெருகேறி செய்தி சென்றது.

இந்தக் குழப்பங்களுக்கிடையில் சுந்தரம் எழுதியதாகச் சொல்லப்பட்ட கடிதம் பற்றிய செய்தி வந்தது. பத்துப்பன்னிரண்டுபேர், பத்துப் பன்னிரண்டு விதமான கடிதங்களைச் சொன்னார்கள். காதல்கடிதம் எழுதும்படியான ஆற்றல் எந்த அளவு உயர்ந்துள்ளன என்பதைக் காட்டின.

பெரிய கொள்ளையோ, பயங்கரமான கொள்ளையோ நடந்து, பின் துப்புத்துலக்கும்பொழுது ஒவ்வொன்றாக வெளிவரும் பொழுது மக்கள் மிகுந்த ஆச்சரியத்துடன், மிகுந்த ஆவலுடன் கேட்பதைப்போல, சுந்தரம்-குமுதா காதல் பற்றிய விவரங்களை எல்லோரும் கேட்டார்கள். ஒவ்வொன்றும் புதிது புதிதாக வந்தன. உண்மையென்றால் அதைப்பற்றி ஒரே விதமான விவரந்தான் இருக்கும் இதுதான் கற்பனையாயிற்றே! மிகச்சுலபத்தில் மனதில், தோன்றிய கதைகளெல்லாம் அந்த வதந்தியில் சேர்ந்துவிட்டன. "நேற்று மாலை சுந்தரமும், குமுதாவும் ஒருகாரில் சேர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள்!" "நேற்று இரவு வெளிச்சத்தில் ஏரியில், படகில், குமுதாவும் சுந்தரமும் உல்லாசமாகப் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தார்கள்!"

"மரத்திலேறி, நூலேணியை வீசி, குமுதாவின் அறைக்குப் போக சுந்தரம் முயன்றான். வார்டன் கல்யாணி பார்த்து விரட்டினாள்!" இவ்வாறு புதுச் செய்திகள் வந்தன. ரோமியோவும் டான்சுவானும் ஒன்று சேர்ந்து வந்ததைப்போல, கதைகளிற் படித்ததை சுந்தரம் பேரில் போட்டார்கள்.

சுந்தரம் அப்பாவி, அப்படியே தத்தளித்துவிட்டான். குற்றஞ் செய்யாதவனைப் பிடித்து "குற்றவாளி, குற்றவாளி" என விடாமல் சொன்னால், தான் குற்றவாளிதானோ என்ற சந்தேகம் அவனுக்குக் கூட உண்டாகிவிடும். அதுபோல, பொழுது விடிந்தால் பொழுது போனால், எல்லோரும் சொல்வதைப் பார்த்தால், தான் ஏதாவது குற்றஞ்செய்துவிட்டோமாவென்ற எண்ணம் சுந்தரத்துக்கு உண்டாகும். நாள்முழுவதும் அறையிலேயே அடைந்து கிடக்கும்பொழுது முன்போலப் படிக்க முடியாது. மாணவர்கள் சுமத்தும் பழி வெளியில் பேசப்படுவது அவனுக்கு அவமானமாகத்தான் இருந்தது அவனை வாட்டியது.

அவன் அஞ்சி நடுங்கி வெளிக்கிளம்பாமல் அறையினுள் அடைந்து கிடக்கும் பொழுது பிரின்சிபாலிடமிருந்து பியுன் வந்தான். "உங்களைக் கூப்பிட்டுவரச் சொல்கிறார்!"

சுந்தரம் மிக அவசரமாக வறு சட்டையை மாற்றிக் காண்டு, அவரைப் பார்க்கக் ளம்பினுன். கல்லூரித் தலைர் இயல்பாக நல்ல குணமுடையவர். மாணவர்களில் ாராவது கஷ்டப்பட்டால், டனே கூப்பிட்டனுப்பி ஆறுதல் சொல்லி, உதவி அளித்து அனுப்புவார். ஆதலால் பிரின்பால் கூப்பிட்டதும் சுந்தரம் ப்பொழுதும்போல் மிக அடக ஒடுக்கத்துடன் போய் நின்ருன்.

கல்லூரித் தலைவர் மிகுந்த கர்பத்துடன் காணப்பட்டார். சுந்தரம்! உன்னைப்பற்றி ல்ல அபிப்பிராயம் இதுவரை வைத்திருந்தேன். ஆனுல் கல்லூரியின் ஒழுங்குமுறையைக் கெடுக்கும் வகையில் டந்திருக்கிருய்! உன்னை ஒரு வாரத்திற்குக் கல்லூரியிலிருந்து விலக்கி வைத்திருக்கிறேன்!''

வெடிகுண்டைத் தூக்கிப் போடுவது போலிருந்தது. திகைத்துப்போய் சுந்தரம் நின்ருன்.

பெண்கள் விடுதி வார்டன் கல்யாணி, பேராசிரியர்சுந்தரம், உதவிப் பிரின்சிபால் முதலியவர்கள் அங்கு எதிரில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் கூடி முதலில் எடுத்த முடிவைத்தான் அவர் அறிவித்தார்.

சுந்தரம் தட்டுத்தடுமாறி 'மன்னிக்கணும்........என்று ஆரம்பித்தான். கல்லூரித் தலைவர் அதற்குமேல் அவனைப் பேச அனுமதிக்கவில்லை. 'எப்படி மன்னிக்க முடியும்? உன்னை மன்னித்துவிட்டால், அப்புறம் எல்லா பையன்களும் கடிதங்கள் எழுதி காதல்தேவதையைக் கூப்பிட ஆரம்பித்துவிடுவார்கள். ஒழுங்கு கெட்டுவிடும், இந்தக் கல்லூரிக்குள்ள மதிப்பே போய்விடும். போ! ஒரு வாரம் உன்னை விலக்கி வைத்திருக்கிறேம்! நீ என்ன தான் சொன்னுலும் நாங்கள் உன்னை மன்னிக்க முடியாது.'' கல்லூரித் தலைவர் கையில் சில கடிதங்கள் இருந்தன. பேசி முடியும்பொழுது, அந்தக் கடிதங்களைத் தட்டினுர்.

சுந்தரத்துக்குப் பேச முடியவில்லை. வாயைத் திறந்தால், மூச்சு வருகிறதேயன்றி, வார்த்தை வரவில்லை. அவ்வளவு பயம், நடுக்கம்.

"போ! என்ருல் நிற்காதே!''

சவுக்கு கொண்டு அடிப்பது போலிருந்தது. சுந்தரத்துக்குப் பயம் போய் கோபம் வந்தது, அதுவரை பட்ட மனவேதனை அடக்கி வைத்திருந்த கஷ்டம் ஆத்திரமாக மாறியது, வேகமாக வந்து, மூடியிருந்த கதவைத் திறந்து படீரென்று வேகமாகச் சார்த்தி வெளியே வந்தான். அடி தாளாமல் அந்தக் கதவிலிருந்த கண்ணுடி கீழே விழுந்து நொறுங்கியது.

கல்லூரித் தலைவரின் கோபம் அதிகமானது. கதவுக்கருகில் வந்து, "சுந்தரம்! உன்னை ஒரு வாரத்துக்கு விலக்கி வைத்திருப்பது மட்டுமல்ல, கதவின் கண்ணுடியை உடைத்ததற்காக ஐந்து ரூபாய் அபராதங்கூட!'' என்ருர்.

முன்பு நடுங்கிக்கொண்டிருந்த சுந்தரம் அல்ல இப்பொழுது. திரும்பிப்பார்த்து முறைத்தவன். "அப்படியா?'' என்று சுந்தரம் திரும்பி வந்து, மற்ருெரு கதவைத் திறந்து ஓங்கி சாத்தினுன். அதிலிருந்த கண்ணுடியும் தகர்ந்து விழுந் "இன்னெரு ஐந்து ரூபாய் அபராதம்! போகிறேன்! என்று சுந்தரம் நடந்து சென்ருன். கல்லூரித்தலைவரும், மற்றவர்களும் இப்பொழுது திகைத்து நின்ருர்கள்.

வெளியில் மாணவர்கள் கூட்டமாகக் காத்திருந்தார்கள். சுந்தரத்தை கல்லூரித் தலைவர் அழைத்திருப்பதும்,ஏதோ அபராதம், தண்டனை தரப்படலாமென்பதும் தெரிந்திருந்தது. சுந்தரம் இறங்கி வந்ததும், அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். சங்கரன் மற்றவர்களைத் தள்ளிக்கொண்டு, "என்ன நடந்தது?'' என்று கேட்டான். சங்கரனைப் பார்த்ததும் சுந்தரத்துக்குக் கடுங்கோபம் வந்தது. இவனுல் தானே இவ்வளவு தொந்தரவும் வந்தது! சுந்தரம் தனது பலமனைத்தையும் சேர்த்து, கையை மடக்கி ஓங்கி, "இது தான் நடந்தது?'' என்று ஒரு குத்து விட்டான். எதிர்பாராத அடியால், சங்கரன் மல்லாந்து விழுந்தான் கூடியிருந்தவர்கள் திகைத்து நின்ருர்கள். சுந்தரம் அப்படி அடிதடி பழகும் முரடனுக ஆவானென்று சங்கரனுடைய நண்பர்களில் ஒருவனுன மணி - கொஞ்சம் நோஞ்சலாக இருப்பான், அவன் "ஏன் சுந்தரம் அப்படி கோபம்?'' என்று அருகில் வந்தான். சுந்தரம் அவனை அலட்சியமாகப் பார்த்து, அப்படியே அவனை அலக்காகத் தூக்கி, பக்கத்திலிருந்த தண்ணீர்த் தொட்டியில் போட்டுவிட்டான். மறுநாள் "சுந்தரம் இரண்டு வாரம் விலக்கப்பட்டான், 20 ரூபாய் அபராதம்!'' என்ற அறிவிப்பு, கல்லூரித் தலைவரின் கையெழுத்துடன், ஒட்டப்பட்டது.

சுந்தரம் அவற்றைப் பற்றி இலட்சியம் செய்யவில்லை. முன்பு மற்ற மாணவர்களைக் கண்டு அவன் ஓடி ஒளிந்தது போக, இப்பொழுது இவனைக் கண்டு மற்றவர்கள் ஓடி ஒளிந்தார்கள் "ஓ" என்று கூச்சல் போடுவான், மற்றவர்கள் படிக்கும்பொழுது சத்தம் போட்டு பாடுவான் தண்ணீர்ப் பானையை மாடியிலிருந்து கீழே போட்டு உடைப்பான். அவனுடைய மாறிய சுபாவத்தைப் பார்த்ததும் ஒரு வேளைப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று கூடச் சிலர் பயப்பட்டார்கள். இது வரை இருந்த பயம், அடக்க வொடுக்கம் எல்லாம் பறந்து விட்டன. அவ்வளவுதான்!

இரண்டு வாரங்கள் முடிந்தன. சுந்தரத்தை விலக்கி வைத்திருந்த காலம் முடிவுற்றது. சுந்தரம் பழைய நிலைக்குத் திரும்பவில்லை. பரிட்சைக்கு மேற்கொண்டு பத்து, பதினைந்து நாட்கள் தானிருந்தன. இருந்தாலும் கொட்ட மடித்துக்கொண்டிருந்தான். முதலாவதாக சுந்தரம் வருகிருனென்ருல் சங்கரன் அறைக்குள் போய் புகுந்து கொள்வான்! சுந்தரம் கொடுத்த ஒருகுத்து, அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்துவிட்டது.

சுந்தரத்தைப் பேராசிரியர் சுந்தரம் அழைத்திருந்தார். சுந்தரம் போனபொழுது பேராசிரியர் வீட்டிலில்லை. சுந்தரம் காத்திருந்தான். அப்பொழுது குமுதா அங்கு வந்தாள். சுந்தரத்தை யாரென்று அவளுக்குத் தெரியாது.

"பேராசிரியர் சுந்தரம் இருக்கிருரா?' என்று கேட்டாள்.

சுந்தரம் எழுந்து நின்ருன். "இல்லை!''

குமுதா உட்கார்ந்தாள். அவள் பரபரப்புடன் காணப்பட்டாள். சுந்தரம் மேலேயிருந்த விசிறியை முடுக்கிவிட்டான்.

"தண்ணீர் கொண்டு வா!'' சுந்தரத்தைப் பார்த்ததும் தலை மயிர் பரந்து ஆடை அலங்கிப்போய் இருந்ததால், சுந்தரத்தைப் பேராசிரியர் வீட்டில் வேலை பார்ப்பவன் என்று அவள் நினைத்திருக்க வேண்டும்.

சுந்தரம் தட்டுத்தடுமாறி உள்ளே போய் ஒரு குவளையில் தண்ணீர்கொண்டுவந்து வைத்தான். ஒரு மடக்குத் தண்ணீரைக் குடித்து விட்டு, "சுத்த மோசம்! சுத்த மோசம்!'' என்று குமுதா சொல்லிக் கொண்டாள்.

"தண்ணீர் நன்ருக இல்லையா?'' என்று கேட்டான்.

"தண்ணீருக்கு ஒன்றுமில்லை. நன்ருகத்தானிருக்கிறது. அப்பா இன்று வருவதாக எழுதிவிட்டார். நான் என்ன செய்வது?''

போட்டியின் உண்மை!

ஒரு சமயம் இலண்டனில் இரண்டு பத்திரிக்கைகள் தோன்றின. அவற்றின் முழுவேலை வதந்திகளைப் பரப்புவது, வசைமொழிகளை வீசுவது, எச்சரிக்கைகளை விடுப்பது, மறைவாக நடந்ததாகக் கூறப்படும் பல "உண்மைகளை" மக்களின் பார்வைக்கு வைப்பது, அதாவது "மஞ்சள் நிறப் பத்திரிக்கைகள்'' என இங்கிலாந்தில் கூறப்பட்ட தாழ்ந்தவகைப் பத்திரிக்கைகள். அவை மற்றவர்களைத் தாக்குவதுபோக, ஒன்றையொன்றே தாக்க ஆரம்பித்தன.

அவைகளின் பெயர்கள் "வெட்டு" "குத்து" என்று வைத்துக்கொள்ளலாம். "வெட்டு" பத்திரிக்கையில் ஒருசெய்தி "சவால்! சவால்! குத்து ஆசிரியர் இதற்குப் பதில் சொல்வாரா?'' என்று வரும். அதற்குப் பதிலாக "குத்து" பத்திரிக்கையில் "வெத்துவேட்டு ஆசிரியரே! வீணுக மிரட்டாதீர்!'' என்று காரசாரமாகப் பதில் வரும். இரண்டு பத்திரிக்கைகளும் ஒன்றையொன்று தாறுமாருகத் தாக்கிக்கொண்டன. ஒரு பத்திரிக்கையின் கேள்விகளுக்கு மற்ருெரு பத்திரிக்கை என்ன பதில் சொல்லப்போகிறது என்ற அளவில் மக்கள் இரண்டு பத்திரிக்கைகளையும் வாங்கினுர்கள். "வெட்டு" "குத்து" இரண்டும் பெயருக் கேற்றபடி ஒன்றையொன்று தாக்குவதில் சளைக்காமல் இருந்தன.

ஆனுல் இந்தப்பத்திரிக்கைகளைப் பார்த்த ஒரு பிரபு, ஆங்கிலப் பத்திரிகைகளின் தரம் இவற்ருல் குறைகின்றனவே என வருத்தப்பட்டு, இரண்டு பத்திரிக்கை ஆசிரியர்களையும் அழைத்துச் சமாதானப்படுத்திவிடவேண்டுமென நினைத்தார். அதன்படி அந்த இரண்டு பத்திரிக்கை ஆசிரியர்களையும் தான் சந்திக்க விரும்புவதாகக் கூறி தனித்தனியாக அழைப்பு அனுப்பினுர்.

குறித்த நேரத்தில் ஒருவர் மட்டும்தான் வந்தார். பிரபுவின் வேலையாள் அவரை வரவேற்று ஒருஅறையில் உட்காரவைத்தான். மற்ருெரு ஆசிரியர் வரட்டுமென்று பிரபு நெடுநேரம் காத்துப் பார்த்தார். அவர் வரவில்லை. கடைசியாக விருந்தினர் அறைக்குப் போய், "மன்னிக்க வேண்டும், உங்களைக் காக்க வைத்துவிட்டேன். இரண்டு பத்திரிக்கை ஆசிரியர்களையும் ஒன்ருக உட்காரவைத்து, சில விஷயங்களைச் சொல்லவேண்டும் என்று நினைத்தேன்!'' என்று பிரபு சொன்னுர்.

"பரவாயில்லை, இரண்டு பத்திரிக்கைகளுக்கும் நான் தான் ஆசிரியர்! என்ன விஷயம், சொல்லுங்கள்'' என்று உட்கார்ந்திருந்தவர் சொன்னுர்!

"அப்பாவந்து என்ன செய்வார்?"

"என்ன செய்வாரா? அது தான் எனக்குத் தெரியவில்லை. திட்டுவார். படித்தது போதும் ஊருக்குப்போ என்று சொல்வார். எல்லாம் அந்த முரடன் சுந்தரம்."

சுந்தரம் மயிர்க்கூச்செறிந்து நின்றான். "சுந்தரம் முரடனா?" அவனையுமறியாமல் கேட்டான்.

"நீ அவனைப் பார்த்ததில்லையா?"

"நான் அவனைச் சந்தித்ததில்லைக்கா?"

"நான்கூடப் பார்த்ததில்லை. மிகவும் முரடனும். அன்றைக்கு ஒரு பையன் மண்டையைப் பிளந்துவிட்டானும். ஒருபையனைப் பிடித்து மூச்சுத் திணறத் தண்ணீருக்குள் அமுத்திவிட்டானும்!" அப்படி சுந்தரம் பெண்கள் விடுதியில் பேசப்பட்டிருக்கிறான்.

"இவர்களெல்லாம் எதற்குப்படிக்கவேண்டும்?" குமுதா கேட்டாள். சுந்தரம் பேசாமலிருந்தான்.

பேராசிரியர் சுந்தரம் வந்து சேர்ந்தார்.

"உங்களைத்தான் பார்க்கவந்தேன்," என்று குமுதா எழுந்தாள்.

"என்ன செய்தி?"

"அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது."

"என்ன சொல்கிறார்?" பேராசிரியர் உள்ளேபோய் தன்னறையில் உட்கார்ந்தார். குமுதா பின்தொடர்ந்தாள். "இங்கு நடந்த புரளியெல்லாம் அப்பாவுக்குத் தெரிந்திருக்கிறது. இன்றைக்கு வருவதாக எழுதியிருந்தார்."

"வரட்டுமே!"

"வந்தால், அவர் சுபாவம் உங்களுக்குத் தெரியாது, சார்! கோபிப்பார், வரவேண்டாமென்று தந்தி கொடுத்து, எனக்கும் அந்த வதந்திகளுக்கும் கொஞ்சங்கூடச் சம்மந்தமில்லை என்று எழுதிப்போட்டிருக்கிறேன்."

பேராசிரியர் சிரித்துக்கொண்டு, "நீஎழுதியது இருக்கட்டும். சுந்தரம் என்ன சொல்கிறான் இதைப்பற்றியெல்லாம்?" என்று கேட்டார்.

"என்ன, சார், நீங்களே கேலி செய்கிறீர்கள்?'!

"கேலியா?"

"ஆமாம், அந்த சுந்தரத்தை நான் பார்த்ததே கிடையாது, பேசியதும் கிடையாது."

"அப்பாடா உங்களை நம்பவே முடியாது. அவனுடன் நீ பேசிக்கொண்டிருந்ததை நான் கண்ணால் பார்த்தேனே!"

"இல்லையே! நான் வார்டனிடம் சொல்லிக் கொண்டு நேராக உங்கள் வீட்டுக்குத்தான் வந்தேன்."

பேராசிரியர் சுந்தரம் வழுக்கைத் தலையையும், அறுபது வயதான நெற்றியையும் தடவிக்கொண்டார்.

"அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாயே!',

"யாருடன்? உங்கள் வேலைக்காரன்தானே அங்கு இருந்தான், சுந்தரம் என்பவர் வரவேயில்லையே!"

"வேலைக்காரனா? என்னுடைய வேலைக்காரனை கடைக்கு அனுப்பியிருக்கிறேனே?"

"அப்படியானால் அவன்..."

"அவன்தான் சுந்தரம்!" சரி, சரி! ஏன் எல்லோரையும் ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? நடந்ததையெல்லாம் சொல்லிவிடு! நானே உங்கள் அப்பாவிடம் சொல்லி..."

வெளியில் உட்கார்ந்திருந்த சுந்தரம் கோபத்துடன் எழுந்து கதவைச் சாத்திக்கொண்டு போனான். அதிலிருந்த கண்ணாடிப் பலகை பெயர்ந்து விழுந்தது. சுந்தரமும் குமுதாவும் வெளியேவந்து பார்த்தார்கள். அந்த "முரடன்" வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். உடைந்து கிடந்த கண்ணாடித் துண்டுகளைப் பார்த்து பேராசிரியருக்குக் கோபம் வந்தது.

சுந்தரம் எப்படியோ பரீட்சையை எழுதி முடித்தான். வேடிக்கை என்னவென்றால், பரிட்சை முடிவுகள் வெளிவந்தபொழுது சுந்தரம் முதலாவதாகத் தேறியிருந்தான். "காதற் பரிட்சை" ஆரம்பித்து கலகம் வருகிற வரை அவன் படித்தது போதுமானது. அதற்குமேல் படித்திருந்தால் வீண் குழப்பம் தான் வந்திருக்கும். பரிட்சையின்போது மற்றவர்களைப் போல வீணாகச் சிரமப் பட்டு நெட்டுருப் போட்டு குழப்பிக் கொள்ளாமல், அமைதியாக, பயமில்லாமல் எழுதினான். அவன் பரிட்சையில் தேறியது, அதிலும் முதலாவதாக வந்தது, பலருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

அதைவிட ஆச்சரியமான தேர்வின் முடிவு ஒன்று ஒரு மாதங் கழித்து வெளிவந்தது அதுதான் "சுந்தரத்துக்கும் குமுதாவுக்கும் திருமணம்" என்ற அழைப்பிதழ்!

அதைபபற்றிய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் பேராசிரியர் சுந்தரம்தான். திருமணநாள் அன்றைக்குக் கூட, பேராசிரியர் மிகப் பெருமையுடன் சொல்லிக் கொண்டார் "எனக்கு முதலிலேயே தெரியும், இவர்களிருவரும் காதலிக்கிறார்கள் என்று ஆனால் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. என் கண்ணெதிரே இருவரும் பேசிக் கொண்டிருப்பார்கள். பிறகு கேட்டால் ஒன்றுமே தெரியாதவர்கள்போல இருவரும் நடிப்பார்கள். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாமென்று நான் பெண்ணுடைய அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். சுந்தரத்துக்குக் குமுதாவைக் கல்யாணம் செய்துகொடுத்து விடுங்கள் இல்லாவிட்டால் பெண்ணின் பிணத்தைத்தான் பார்ப்பீர்கள்?', என்று ஒருபோடுபோட்டேன். அதேமாதிரி சுந்தரத்தின் அப்பாவுக்கும் ஒரு கடிதத்தைத் தட்டினேன். இருவரும் பயந்துபோய், ஒத்துக்கொண்டார்கள். திருமண ஏற்பாடு செய்கிறேன் என்று தெரிந்ததும், குமுதா முதலில் ஒப்புக்கொண்டாள், பின் சுந்தரமும் ஒப்புக்கொண்டான், தாங்கள் காதலிப்பதை; அப்படி வாருங்கள், வழிக்கு! என்று திருமணத்தை முடிக்கச் சொன்னேன்." பேராசிரியரின் திறத்தையும், முன் யோசனையையும், எல்லோரும் பாராட்டினார்கள் மற்றவர்களைவிடச் சுந்தரமும், குமுதாவும் அதிகம் பாராட்டினார்கள்.

காதற்பரிட்சையை சங்கரன் ஆரம்பிக்க, பேராசிரியர் சுந்தரம் வந்து மார்க்குப்போட்டு பாஸ் தந்தார். காதற்பரிட்சை எங்கோ ஆரம்பித்து எங்கேயோ முடிந்து விட்டதே என்கிறீர்களா, கதை என்றால் அப்படித்தான் இருக்கும்! 0

தவளைப் பந்தயம்

குதிரைப்பந்தயம் நடைபெறுவதைப்போல, தவளைப் பந்தயமும் அமெரிக்காவில் நடைபெறுகிறது. குதிரைப் பந்தயத்தில் எப்படி பல குதிரைகள் நிறுத்தப்பட்டு, அவற்றில் வேகமாக ஓடிவருகிற குதிரைக்குப்பரிசும், அந்தக் குதிரைமீது பணம் கட்டுகிறவர்களுக்குப் பங்குப் பணமும் கிடைக்கிறதோ, அவ்வாறே அதிக தூரம் தாண்டுகிற தவளை மீது பணங் கட்டி, பந்தயம் விடுகிறார்கள். ஒரு தவளை மூன்று தடவைகள் தாண்டியதும், போயுள்ள தூரத்தை அளந்துகொள்கிறார்கள்.

அமெரிக்காவில் பிளாரிடா பகுதியில் "சாரசோட்டா" என்ற இடத்தில், ஆண்டுதோறும் மே மாதத்தில் நடைபெறுகிறது. கலிபோர்னியாவில் "ஏஞ்சல்காமப்" என்ற இடத்திலும் தவளைப் பந்தயம் நடக்கும். பந்தயத்துக்கு 25,000 லிருந்து 30,000வரை மக்கள் கூடுவார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் தாங்கள் பழக்கியிருக்கும் தவளைகளுடன் வருவார்கள். சென்றஆண்டு முதற்பரிசுபெற்ற தவளையும் அதன் சொந்தக்காரரும், முதலாவதாக உள் நுழைவார்கள். பாண்டுவாத்தியங்கள் முழங்க, அந்தஊர் நகரசபைத்தலைவர் வரவேற்று; தவளைகளுக்கெல்லாம் நல்வரவு கூறி, வரவேற்புரை ஆற்றுவார். வீதியின் மத்தியிலேயோ, ஒரு மைதானத்தின் மத்தியிலேயோ தவளைப்பந்தயம் ஆரம்பமாகும்.

தவளையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து, தவளைச் சொந்தக்காரர் குச்சியில் தட்டிக்கொடுப்பார்; தவளை ஒரு துள்ளு துள்ளி விழும். அதைப்போல மூன்றுதடவைகள் துள்ளிக் குதித்ததும், மொத்தத் தூரம் அளக்கப்பட்டு, கூடியிருக்கும் மக்களுக்கு அறிவிப்பார்கள். ஆவலுடன் காத்திருக்கும் தவளைப்பந்தயக்காரர்கள் ஆரவாரிப்பார்கள்.

சில தவளைச் சொந்தக்காரர்கள், தாங்கள் குரல்கொடுத்தாலே தவளை துள்ளிக்குதிக்கும் விதத்தில் பழக்கியிருப்பார்கள்.

பந்தயக் குதிரைகளுக்குப் பெயர்கள் வைக்கப்படுவது போல, பந்தயத்தவளைகளுக்கும் பெயர்கள் இருக்கும். பந்தயம் கட்டுபவர்கள், பந்தயப் புத்தகத்தைவைத்து முன்பு பெற்ற வெற்றிகள், பழக்கம் இவைகளை வைத்துப் பந்தயங் கட்டுவார்கள். குதிரைப்பந்தயத்தில் நடைபெறும் மற்றபோட்டிகள், சத்தம், வெற்றி-தோல்விகள் எல்லாம் இருக்கும்.

முதலாவதாக வரும்—அதாவது மூன்று தடவைகளில் அதிகத்தூரம் தாண்டுகிற தவளையாருக்கு 150 டாலர் (அதாவது 700ரூபாய்க்குமேல்) பெருமானமுள்ள பரிசு தரப்படும்.

இதுவரை மூன்றுதடவைகளில் தாண்டி வைக்கப்பட்டுள்ள "உலக ரெகார்டு" 1[illegible] அடி 5 அங்குலம்.

"ஈடர்ன் புல்பிராக்" என்ற ஒருவகைத் தவளை இத்தகைய பந்தயங்களுக்கு ஏற்றவைகளாகக் கொண்டுவரப்படுகின்றன. தவளைப்பந்தயத்தில் பிரசித்திபெற்ற சில பந்தயக்காரர்கள் 40,50 பந்தயத்தவளைகளை சகலவசதிகளும் நிரம்பிய சிறு அறைகளில் வளர்த்து வருவார்கள். பந்தயத் தவளைகளின்மீது பணத்தைக்கட்டி, தங்கள் அதிருஷ்டத்தைப் பார்த்துக்கொள்ளும் பல்லாயிரவரும் அமெரிக்காவில் இருக்கின்றனர்! 0

ஐந்தாண்டுத் திட்டத்தின் அலங்கோலம்!

—(0)—

நீர்த்தேக்கத்தை உண்டாக்கி, தேக்கிய தண்ணீரை உபயோகப்படுத்தாத நிலை!

அக்கிராசனர் அவர்களின் கண்டனம்

—(0)—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் 14ல் 1 பங்கு தான் பயன்படுத்தப்படுகிறது!

—(0)—

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பிரமாண்டமான திட்டங்களைப் போட்டார்களே தவிர, திட்டம் நிறைவேறினால் அதனால் கிடைக்கக்கூடிய முழுப் பலனையும் பெறும் விதத்தில் அரசாங்கம் முன்கூட்டி வழிவகைகளைச் செய்து கொள்ளவில்லை. அதனால் முதல் ஐந்தாண்டுத்திட்டத்தின்கீழ் கோடிக்கணக்கில் செலவிட்டு முடிக்கப்பட்ட பகுதிகளின் கீழ், அவற்றிற்கேற்ற பலன் எடுக்கப்படாமல் வீணாக விடப் பட்டுள்ளன.

திட்டத்தைத் தீட்டியவர் முதலாவதாக எங்கெங்கு திட்டம் போட்டால் எந்தெந்த அளவில் பலன் பெறலாம் என்பதைக் கண்டறிந்து அதிகப் பலன் தரும் விதத்தில், எல்லாப் பகுதியிலிருக்கும் எல்லா மக்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில்திட்டங்களைப்போட்டிருக்கவேண்டும். பல இடங்களில் திட்டங்களைப் போட்டுவிட்டு, அவற்றால் என்ன பலன் கிடைக்கும் என்பதைப் பின்னால் ஆராய்கிறார்கள்.

திட்டம் போடும் பொழுது, உள்நாட்டின் நிலையைவிட வெளிநாட்டின் கவனந்தான் நேரு பண்டிதருக்கும் அவருடன் திட்டந்தீட்டியவர்களுக்கும் இருந்திருக்கின்றது. இந்த நாட்டைப் பெரியநாடு ஆக்க வேண்டுமென்ற ஆவலில், பெரிய நாடுகளில் இருப்பது போன்ற மிக உயர்ந்தகட்டிடங்கள், பிரமாண்டமான அமைப்புகள் இந்நாட்டுக்கும் வர வேண்டுமென அவர்கள் நினைத்தார்கள். வெளிநாடுகளில் எட்டடுக்கு மாளிகை, ஒரு மைல்நீளமுள்ள அணைக்கட்டு, மிகப் பெரிய புகைபோக்கியுள்ள தொழிற்சாலை இவைகளைப் பார்க்கும்பொழுது, அவற்றைப்போன்று இந்தியாவிலும் ஏற்படவேண்டுமென அவர்கள் தீர்மானித்துவிட்டார்கள். அவ்வாறு பெரிய திட்டங்களைப்போடும் பொழுது திட்டங்களின் அளவு அவர்களின் கவனத்தை ஈர்த்த அளவு, திட்டத்தினால் வரக்கூடிய பலன் ஈர்க்க வில்லை. இந்தியாவுக்கு வருகிற வெளிநாட்டார்கள் அவற்றைப் பார்த்து, "ஆசியாவிலேயே மிகப்பெரியது" "ஆச்சரியப்படத்தக்க தொழிற்சாலை" "பிரமாதமான கட்டிட வேலை" என்று எழும்பியுள்ள கட்டிடத்தையும், தோண்டப்பட்டுள்ள மண்ணையும் பார்த்துச் சொன்னார்கள். அந்தவகையில் வெளிநாட்டாரின் கவனத்தைப் பெறுகிறது என்பதற்காக, கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணம் வாரியிறைக்கப்பட்டு சிலதிட்டங்கள் போடப்பட்டுள்ளன. உல்லாச நந்தவனத்தை வைத்து ஊர் சுற்றிப்பார்க்க வருபவர்களை அங்கு அழைத்துவந்து அவர்களுக்கு வேடிக்கை காட்டுவது போல, இவர்கள் கட்டிய அணைக்கட்டுகளையும், தொழிற்சாலைகளையும் கட்டுகிறார்கள்.

அவர்கள் நிறைவேற்றிய திட்டங்கள் வெறும்வேடிக்கை காட்டப் போடப் பட்டவை என்று கூறவில்லை. ஆனால் அந்தத்திட்டங்களைப் போடும் பொழுது, அணைக்கட்டுக்களையும், நீர்த்தேக்கங்களையும்உண்டாக்கும் பொழுது, மற்றவர்கள்பார்த்து மலைக்கவேண்டும் என்று மன அரிப்பு அரசாங்கத்தினருக்கு இருந்திருக்கிறது. அதனால் கிடைக்கக் கூடிய பலனையும் கவனிக்காமல் பெரிய கட்டிடங்களைக் கட்டுவதில் அரசாங்கம் உற்சாகம் காட்டியது. கட்டிடம் கட்டி முடிந்ததும், இதை என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியாமலிருக்கும்.

தேவைக்கு அதிகமான அளவில் சில திட்டங்களைப்போட்டு விடுகிறார்கள், அல்லது திட்டத்தினால் கிடைக்கக் கூடிய முழுப்பலனையும் உபயோகித்துக்கொள்வதில்லை.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ், இப்பொழுது வரை 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களைப் பயிர்த் தொழில் செய்வதற்கான தண்ணீரைத் தரும் அளவு திட்டம் நிறைவேறி விட்டது. ஆனால் அந்தத் திட்டத்தினால் 11 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தான் பயிராகின்றன!

நீர்ப்பாசனத் திட்டங்களில் பக்ரா நங்கல்லுக்கு அடுத்தபடி பெரியதாக இருப்பது தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டமாகும். மற்ற மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டபொழுதும், ஒன்றுக்குப் பாதியாக, கால்வாசியாக மற்ற மாநிலத் திட்டங்கள் வெட்டப்பட்டபொழுதும், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்மட்டும் மிகக் கண்ணுங் கருத்துடன் இந்திய அரசாங்கத்தால் வளர்க்கப்பட்டது. வரவரச் செலவு ஏறியதையும் லட்சியப் படுத்தாமல், மற்ற திட்டங்களை வெட்டிய நேரத்தில் அதற்கு மட்டும் தனிச் சலுகை கொடுத்து நிறைவேற்றுகிறார்கள். 1951ல் 77 கோடியாக இருந்த தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம், ஆண்டுதோறும் வளர்ந்து, 77 கோடியிலிந்து 88கோடி, 98 கோடி, 103கோடி, 110கோடி வளர்ந்துகொண்டே வந்துள்ளது. 77 கோடியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் 110 கோடியானாலும் பாதகமில்லை, திட்டம் பூர்த்தியாகவேண்டும் என மத்திய அரசாங்கம் மிக ஊக்கத்துடன் இருக்கிறது. ஆனால் திட்டம் நிறைவேறுகிற அளவுக்கு அதனால் கிடைக்கக் கூடிய பலனை அரசாங்கம் உபயோகிக்கவில்லை.

கட்டப்பட்ட அணைக்கட்டு, அதில் கொட்டப்பட்ட வரிப் பணம் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை. மொத்தம் ஒன்னறை லட்சம் ஏக்கர்களுக்குப் பாய்ச்சக்கூடிய தண்ணீரைத் தேக்கிவிட்டு பதினோராயிரம் ஏக்கர்கள்மட்டும்தான் பயிரிடப்படுகின்றன. பதினான்கில் ஒருபகுதி தண்ணீர் உபயோகமாகிறது, பாக்கி பதின்மூன்று பங்கு தண்ணீர் வீணாகத் தேக்கப்பட்டு, வீணாக விடப்பட்டு, கடலுக்குப் போய்விடுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பிறகு மொத்தம் 63லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ச்சக்கூடிய தண்ணீர் தேக்கப்பட்டபோதிலும், அதில் 23லட்சம் ஏக்கர்களுக்குப் பாய்ச்சக்கூடிய தண்ணீர் எதற்கும் உபயோகப் படுத்தப்படாமல் வீணாகத் தேக்கப்பட்டு, பின் வீணாக விடப்பட்டுக் கடலில் போய் சேர்ந்துவிடுகிறது.

திட்டங்களைப் போட்டு அணைக்கட்டுகளைக் கட்டிவிட்டார்கள்; கட்டிய அணைக்கட்டுகளின் முழுப் பலனையும் பெறவில்லை. மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் தேக்கப்பட்ட தண்ணீர் வீணாகப் போகிறது.

திட்டங்களைப்போட்டவர்கள் அணைக்கட்டுக்களைக் கட்டுவதில் காட்டிய தீவிரத்தை, அதைக்கட்டி முடிந்ததும் அதன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான வழிகளில் காட்ட முடியவில்லை. சில இடங்களில், தண்ணீரைக் கொண்டு போனாலும் இவர்கள் போடுகிற நீர்ப்பாசன வரி உயர்வுகளைக் கண்டு குடியானவர்கள் தங்களுக்கு அந்தத் தண்ணீர் வேண்டாமென்று கூறிவிடுகிறார்களாம். கடைசியாகத் தேக்கப்பட்ட தண்ணீர் பலபகுதிகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டாலும், அது ஏற்றுக் கொள்ளப்படாமலும் வீணாகப்போய் விடுகிறதாம்.

இந்தியாவின் உணவு நிலைமை மோசமாயிருக்கின்ற நிலையில், கிடைக்கின்ற தண்ணீர் முழுவதும் பயன்படுத்தப் படவேண்டும். ஆனால் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்துக்குத் தகுதியுள்ள தண்ணீரே மூன்றில் ஒருபகுதி வீணாகவிடப் பட்டுவிடுகிறது.

திட்டத்தைப் போடுபவர்கள் பெரிய கட்டிடங்களையும், பிரமாண்டமான அணைக்கட்டுக்களையும் கட்டிமுடித்தால் மட்டும் போதாது. அதனால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதையும், கிடைக்கக் கூடிய பலன்களை எவ்வாறு முழுவதும் பெறுவது என்பதையும் முன்கூட்டியே நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் அலங்கோலம்!

நீர்த்தேக்கத்தைஉண்டாக்கி தேக்கிய தண்ணீரை உபயோகப்படுத்தாத நிலை!

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் 14ல் 1 பங்கு தான் பயன்படுத்தப்படுகிறது!

இந்தியக் குரங்குகளுக்கு வெளிநாட்டில் கிராக்கி

அந்நிய நாடுகளில் பணத்தைச் சம்பாதிக்க இந்திய அரசாங்கம் ஏதேதோ வியாபாரங்கள் செய்து பார்த்தது. கடைசியாக "குரங்கு வியாபாரமும்" செய்யத் தலைப்பட்டுள்ளது. குரங்கு வியாபாரமென்றால், குரங்குகளைப் பிடித்து, அயல்நாடுகளுக்கு அனுப்பி, அவற்றை அங்கு விற்று விடுகிறது. முக்கியமாக அமெரிக்கா, கானடா, பிரிட்டன், ஆசுத்திரேலியா, டென்மார்க், மேற்கு சேர்மனி நாடுகளில் இந்தியக் குரங்குகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

1956-57ல் இந்தியாவிலிருந்து 1,56,893 குரங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அவற்றால் 72 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் இந்தியாவுக்குக் கிடைத்தது!

இந்தியாவிலிருந்து "இராமதூதர்கள்" கிளம்பி வெளிநாடுகளுக்குப் போய், அங்கு மறைந்து கிடக்கும் "சீதேவிகளை" இங்கு கொண்டுவர முயற்சிக்கின்றனர்!

இந்திய செலவாணித் திட்டத்தை மந்திகளாவது காப்பாற்றவேண்டும்!

மந்திரிகள் சம்பளம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் ஆச்சரியமானது. ஏதோ அந்தக் காலத்தில் சொல்லி வைத்தார்கள், தீர்மானம் போட்டார்கள், அதை அப்படியே இப்பொழுது "காங்கிரசில் இருப்பவர்கள் நிறைவேற்ற வேண்டுமானால் எப்படி முடியும்?

அன்றைய காங்கிரசில் தியாகம் செய்தவர்கள், தியாகம் செய்யத் தயாரானவர்கள் ஏராளமாக இருந்தார்கள். ஏழ்மையும் பஞ்சமும் தலைவிரித்தாடும்நாட்டில் ஆயிரம், இரண்டாயிரம் எனச் சம்பளம் கொடுப்பது தகாதுஎன நினைத்தார்கள். தரித்திர நாராயணன்களுக்காக காந்தியார் பாடுபட்டார். இதன்பயனாக கராச்சி தீர்மானத்தில் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் கூடாதென்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இப்பொழுது காந்தியார் வளர்த்த காங்கிரசில், "கனம்"களல்லவா இருக்கிறார்கள். "தரித்திர நாராயணன்களுக்காகப்" பாடுபட்ட காங்கிரசில் பரோடா மன்னரும், குவாலியர் மகாராணியும், செட்டிநாட்டு அரசரும், சேட்டுகளின் தலைவர்களும் அல்லா இருக்கிறார்கள்! ஆகவே மந்திரிகளின் சம்பளத்தைக் குறைக்கவேண்டுமென்ற தீர்மானம் தோற்றுப் போவதில் ஆச்சரியமில்லை.

தீர்மானத்தின் முடிவைவிட, தீர்மானத்தின்மீது எழுந்த விவாதம் தான் வேடிக்கையானது. தீர்மானத்தை எதிர்த்து மந்திரிகளின் சம்பளத்தைக் குறைக்கக் கூடாதென்று பண்டிதநேரு பேசியதுதான் ஆச்சரியமானது!

காந்தியாரின் "வாரிசு" என்று அழைக்கப் படுபவர் நேரு; எளிமையில் குறைந்த சம்பளத்தில் காந்தியார் நம்பிக்கை வைத்திருந்தார் அவருடைய வாரிசு எனச்சொல்லப் படுபவர் "அதிகச் சம்பளம் அவசியம்தான்!" என வாதாடுகிறார்.

இதே நேருபண்டிதர் கராச்சி தீர்மானத்தைக் கையில் வைத்துக்கொண்டு கனல் பொறி பறக்கப் பேசியவர்தான். அந்தப் பண்டிதநேரு, இன்று சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகிறார். கராச்சி தீர்மானத்தில் 500 ரூபாய்க்கு மேற்பட்டு எந்தச் சம்பளமும் இருக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது, இப்பொழுது காங்கிரசுக் கமிட்டியில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இன்னும் கொஞ்சம் தாராளத்துடன் 1000 ரூபாய் அளவுக்கு அதைத் தளர்த்தியது! ஆனால் 500க்கும் குறைவாகச் சம்பளத்தை ஆக்கவேண்டும் என அன்று பேசிய நேரு, 2000 ரூபாய்க்கு மேல் இருக்கும் சம்பளங்களை இன்று ஆதரித்துப் பேசுகிறார்.

"மந்திரிகளுக்கு அவ்வளவு சம்பளங்கள் தேவைதான்" என்று நேருபண்டிதர் கூறும்பொழுது, மந்திரிகளுக்குள்ள செலவுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பெரிய மாளிகையில் இருக்கவேண்டிய அவசியத்தையும், ஏராளமான விருந்தினர்களை உபசரிக்கவேண்டியிருப்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

மந்திரிகளுக்குள்ள செலவுகளையும் சிரமங்களையும் பார்க்கும்பொழுது மூவாயிரம் ரூபாய் வாங்கியும் கடைசியில் முன்னூறு கூட மிஞ்சவில்லையே என்று "சிரமப்பட்ட" அதிகாரியின் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. விருந்துக்கும் வேடிக்கைக்கும், ஆடம்பரங்களுக்கும் அந்தப் பணம் தீர்ந்துவிடுகிறதாம்.

அவர்கள் தருகிற கணக்கைப் பார்த்தால் மந்திரிகளுக்குத் தரப்படும் சம்பளம் போதாது என்றுதான் தோன்றும். ஆனால் அத்தகைய ஆடம்பரங்கள், விருந்து வேடிக்கைகள் தேவையா என்பதுதான் நமது கேள்வி. இப்பொழுது மந்திரிகள் நடத்தி வருகிற தர்பார்முறை ஆடம்பரங்கள் அவசியம்தான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டால், பின் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைக் குறைக்கும் கேள்வியின்பின், மந்திரிகள் ஆடம்பரப்போக்கு சரியானதா என்ற கேள்வி இருக்கிறது. பண்டித நேருவின் கருத்துப்படி, அந்தப் போக்கு நாட்டின் மதிப்புக்குத் தேவை என்று ஏற்படுகிறது.

மந்திரிகளுக்குத் தரப்படும் சம்பளம் என்பதற்கு பண்டித நேரு மற்றொரு காரணத்தையும் தந்திருக்கிறார். காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அந்தக் காரணத்தை மிகவும் வலியுறுத்திக் காட்டியுள்ளார். "கராச்சி தீர்மானத்தின்படி மந்திரிகளுக்கு 500 ரூபாய்க்கு மேல் மாதச்சம்பளம் கொடுக்கக்கூடாது என்பது உண்மைதான். ஆனால் கராச்சி தீர்மானம் போட்டகாலத்தில் இருந்த 500 ரூபாய் இப்பொழுதுள்ள 2000 அல்லது 2500 ரூபாய்களுக்குச் சமமானது!" என்று அவர் சொல்லியுள்ளார். விலைவாசிகளின் கணக்கால் பார்த்தால், கராச்சி தீர்மானக் காலத்தில் 500ரூபாய்க்கு கிடைத்தது இப்பொழுது 2000 அல்லது 2500 ரூபாய்க்கு வருகிறது. எனவே கராச்சியில் தீர்மானத்தில் குறிப்பிட்ட அந்த 500ரூபாய்க்குச் சமமான ரூபாயாக 2000 லிருந்து 2500 வரை எடுத்துக் கொள்கிறோம் என்பது பண்டிதநேரு வாதம்.

மந்திரிகளின் சம்பளம்உயர்ந்திருப்பதற்கு பண்டித நேரு அந்தக் காலத்திலிருந்த ரூபாயின் மதிப்பையும் இந்தக் காலத்து ரூபாய் மதிப்பையும் ஒத்திட்டுக் காரணமாகக் காட்டுகிறாரேயன்றி, அதே காரணத்தை முன்வைத்து மற்றவர்களின் சம்பளங்களைக் கணக்கிடுகிறாரா என்றால், இல்லை.

500 ரூபாயிலிருந்து 2500 ரூபாய்க்குப் போவது சரி என்று வாதாடுகிற நேரு பண்டிதர், 50 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கிய ஒருவனுக்கு 250 சம்பளம் கொடுக்கிறாரா என்றால் இல்லை. முன்பு அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்க்கும் கிளார்க் ஒருவனுக்கு 40 ரூபாய் தரப்பட்டால், நேரு பண்டிதரின் கணக்குப் படி, இன்று அவனுக்கு 200ரூபாய் அடிப்படைச் சம்பளம் கொடுத்தாகவேண்டும். நேரு பண்டிதர் கொடுக்கிறாரா?

அன்று 20 கொடுத்த போலிசுக்காரனின் சம்பளத்தை இன்று 100 ரூபாயாக உயர்த்த வேண்டும். நேரு பண்டிதர் உயர்த்தினாரா?

அன்று 25 ரூபாய் வாங்கியவனுக்கு இன்று 125 ரூபாய் சம்பளம் தரவேண்டும். பண்டித நேரு தருகிறாரா?

அன்றைக்கு 500 ரூபாயாக இருந்தது 2500 ரூபாயாக உயர்வது சரிதான் என்று மந்திரிகள் சம்பளத்துக்காக வாதாடுகிற நேரு, மற்ற ஏழை, பாழைகள், குறைந்தசம்பளக்காரர்களின் நிலைக்கு அதே விகிதத்தை அனுசரித்து சம்பளத்தைக் கூட்டினாரா?

அன்று 50 ரூபாய் சம்பளம் வாங்கியவனுக்கு இன்று 85 ரூபாய், 95ரூபாய் என்று முக்கி முனகி தரப்படுகிறது.

தபால்-தந்தி இலாகாவைச் சேர்ந்தவர்கள் உயர்ந்த சம்பளம் கோரி வேண்டுகோள் விடுத்துள்ளனர். பண்டித நேரு அதைக் கவனிப்பது தானே!

இன்சூரன்சு சிப்பந்திகள் சம்பளம் போதாதென்று, அரசாங்கத்தின் சம்பள விகிதம் அநியாயமென்று கூவுகிறார்களே, இன்றைக்கு 2500 ரூபாயாக உள்ளது அன்று இருந்த 500க்கு சமமானது என்று மதிப்புப்போடுகிற பண்டித நேரு இவர்களுக்கு குறைந்தது 250 ரூபாயாவது சம்பளம் இன்று கொடுத்தால் தான் அன்றிருந்த 50 ரூபாய்க்குச் சமமாகும். 50 ரூபாய்கூட இல்லாமல் ஒருவன் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்று கணக்குப் போட்டு அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தினாரா என்றால் இல்லை.

மந்திரிகளுக்கு அடிப்படை மாதச் சம்பளத்துக்கு மேல், வேறு பல வசதிகள் தரப்படுகின்றன.

500ரூபாய் அலவன்சாகத் தரப்படுகிறது.

வீட்டுவாடகை கிடையாது.

வீட்டில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்துக்கும் செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

அரசாங்கச்செலவில் கார் தரப்படுகிறது, அதற்காகும் எல்லாச் செலவுகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

வெளியூர் பிரயாணம் செய்தால், பிரயாணச் செலவும் நாள்படியும் தரப்படுகிறது.

எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால், ஒவ்வொரு மந்திரிக்கும் 40,000லிருந்து 50,000 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்கு நமது அரசாங்கப் பணத்திலிருந்து செலுத்தப்படலாம். அரசாங்கப் பணம் என்றால் இந்த நாட்டு மக்கள் தந்த வரிப்பணம் என்று அர்த்தம். இந்த நாட்டு மக்கள் என்றால், ஆண்டு ஒன்றுக்கு 270 ரூபாயை சராசரி வருமானமாக உள்ள நாட்டு மக்கள் தரும் பணம்!

270 ரூபாயைச் சராசரியாக உள்ள இடத்தில், ஒருவனுக்கு மட்டும் 40,000, அல்லது 50,000 என்று அரசாங்கம் செலவழிக்கிறது! காரணம் கேட்டால் அந்தக் காலத்திலிருந்த 500 ரூபாய்க்கு இன்றுள்ள 2500 ரூபாய் சமமானது என்று நேரு பண்டிதர் வாதாடுகிறார். அந்தக் கணக்கை வைத்துப் பார்த்தால் இன்றைக்கு சராசரி ஆண்டு வருமானம் 270 ரூபாய் என்றால், அன்றைய மதிப்பில் அது 34 ரூபாய்க்குச் சமமாகும். ஆண்டுக்கு 54 என்றால் மாதத்திற்கு $4\frac{1}{2}$ ரூபாய் ஆக இன்றிருந்த ரூபாய் மதிப்புப்படி இந்தியாவிலுள்ளவர்களுக்கு சராசரி வருமானமாக மாதம் $4\frac{1}{2}$ ரூபாய்தான் கிடைக்கிறது!

மத்திய மந்திரிகளுக்கு 2500 ரூபாய் மாதச்சம்பளம் கொடுப்பதில் தவறில்லை என்று வாதாடுகிற நேருபண்டிதர், மத்திய அரசாங்கத்தில் எண்ணற்ற ஊழியர்களுக்கு எத்தகைய சம்பளத்தைக் கொடுக்கிறார்?

மத்திய அரசாங்கத்தின் கீழ் மொத்தம் 16,19,000 பேர்கள் வேலை செய்கின்றனர். அவர்களில் 13,75,000 பேர்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்பட்டதாக சம்பளத்தை பெறுகிறார்கள்!

அதாவது மொத்தம் வேலை பார்ப்பவர்களில், 100க்கு 85 விகிதத்தினர், குறைந்த சம்பளத்தில் வாழ்கின்றனர்.

பண்டிதநேருவின் கணக்குப்படி, அவர்களுக்கு அந்தக் காலத்திய ரூபாய் மதிப்புப்படி ரூ 20க்கு குறைவான சம்பளம் தரப்படுகிறது!

வெள்ளைக்காரனின் ஏகாதிபத்திய ஆட்சியில் கொள்ளைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று இவர்கள் கூறினார்கள்! 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் யாருக்கும் கூடாது என கராச்சி தீர்மானம் நிறைவேற்றியதும் இவர்கள்தான்! "சரிநிகர் சமானம்" என்று தேசியக் கீதங்களை முழக்கியதும் இவர்கள்தான்! சமதர்ம முறையில் இந்தியாவை மாற்றப்போவதாக ஆவடித் தீர்மானத்தை நிறைவேற்றியதும் இவர்கள்தான்! அவர்களேதான், மந்திரி

ஈர்ங்கை விதிராக் கயவர்!

திருவள்ளுவர் "வாருங்கள் போவோம்" என்று நம்மை அழைக்கிறார்.

"எங்கே?" என்று நாம் வினவுகிறோம்.

"சில காட்சிகளைக் காட்டுகிறேன், கண்டு களிக்கலாம்" என்கின்றார்.

நாமும் இசைந்து அவரோடு ஒருப்படுகிறோம். நம்மையெல்லாம் அழைத்துக் கொண்டு போய் ஒருமாளிகையின் முன்னால் தொலைவில் நின்றுகொள்கிறார்.

"அந்த மாளிகையை உற்றுப் பாருங்கள்" என்கிறார்.

நாமும் உற்றுப்பார்க்கிறோம். ஏதும் புதுமையாகப் படவில்லை. "எதைக் காணச் சொல்கிறீர்கள்?" என்று கேட்கிறோம்.

"அந்த மாளிகைக்குரியவன் இப்பொழுது வெளியே வருவான், உற்றுப் பாருங்கள்" என்கிறார்.

சிறிது நாழிகைக்கெல்லாம் மாளிகைக்காரன் வெளியே செம்பும் கையுமாக வருகிறான். வந்து தாழ்வாரத்தில் நின்று சாப்பிட்ட கையைக் கழுவுகிறான். பிறகு வெளித்திண்ணையிலுள்ள மணையில் அமர்கிறான்.

"பார்த்தீர்களா அவன் செய்ததை?" என்று வினவுகிறார் வள்ளுவர்.

"எதை?" என்கிறோம் நாம்.

"அவன் கைகழுவிவிட்டு அமர்ந்ததை" என்கிறார்.

"இதில் என்ன புதுமை இருக்கிறது?" என்று கேட்கிறோம்.

"உற்றுப் பார்த்தால், ஒரு புதுமை தெரிந்திருக்கும்" என்கிறார்.

"எல்லோரும் செய்யும் செயலைத்தானே அவனும் செய்தான், எல்லோரும் சாப்பிட்டு விட்டுக் கைகழுவுவார்கள். அவனும் அதனைத்தான் செய்தான். இதில் புதுமை எதுவும் இருப்பதாகப் புலப்படவில்லையே!" என்கிறோம்.

"உற்றுப் பார்த்தால் புதுமை ஒன்று புலப்படும்" என்கிறார்.

"ஒன்றும் தெரியவில்லையே!" என்கிறோம் நாம்.

"நன்றாகப் பாருங்கள்" என்கிறார்.

"தாங்களே சொல்லிவிட்டால் எங்களுக்குத் தொல்லை இருக்காது, நன்றாக இருக்கும்" என்கிறோம்.

"அவன் கையைக் கழுவினான் அல்லவா?" என்று கேட்கிறார்.

"ஆமாம்!" என்கிறோம்.

"அவன் கையைக் கழுவினானே தவிர, கழுவியகையை உதறினானா பார்த்தீர்களா?" என்கிறார்.

"ஆமாம்! உதறவில்லை" என்று வியப்புணர்ச்சியோடு கூறுகிறோம்.

"அவன் ஏன் கழுவின கையை உதற வில்லை தெரியுமா?" என்று கேட்கிறார்.

"தெரியவில்லையே! நீங்களே சொல்லிவிடுங்கள். தெரிந்து கொள்கிறோம்" என்கிறோம்.

"அவன் உதறமாட்டான்; உதறவே மாட்டான்" என்கிறார்.

"ஏன்?" என்கிறோம்.

"அவன் உதறினால், கையிலே ஒட்டிக் கொண்டிருக்கும் ஓரிரண்டு சோற்றுப் பருக்கைகள் கீழே விழ நேரிடும். கீழே விழுந்தால் அவற்றை ஏழைஎளியவர்களோ ஈ எறும்பு காக்கையோ பொறுக்கிக்கொள்ள நேரிட்டுவிடும்; அப்படி அவனது சொத்தைப் பிறர் எடுத்துக் கொள்ள அவன் மனம் தாழாது; தன் கையை உதறி, மனவருத்தத்தை வரவழைத்துக்கொள்ள அவன் ஒரு பொழுதும் விரும்புவதே இல்லை; ஆகவே தான் அவன் சாப்பிட்டு ஈரமுள்ள கையை உதறாமல், அப்படியே வாளா உட்கார்ந்திருக்கிறான்" என்கிறார்.

"அப்படியானால் அவன் யாருக்கும், எப்பொழுதும், எதையும் தந்ததில்லையா? தரமாட்டானா" என்று வினவுகிறோம்.

"அப்படிச் சொல்லுவதற்கில்லை, சிலர்க்கு மட்டும் வாரி வாரிக் கொடுப்பான்" என்கிறார்.

"உற்றார் உறவினர் ஆன்றோர் சான்றோர் போன்றவர்களுக்குக் கொடுப்பானா?" என்கிறோம்.

"அவர்களுக்கெல்லாம் கொடுக்க மாட்டான்" என்கிறார்.

"பின் யாருக்குத்தான் கொடுப்பான்?" என்று கேட்கிறோம்.

"யாரொருவன் கையை மடக்கிக்கொண்டு தன் கூன் கையால் பல குத்துக்கள் விட்டு, அவனது முகவாய்க் கட்டையை உடைக்கிறானோ, அவனுக்கு வாரி வாரிக் கொடுப்பான்" என்கிறார்.

"அவன் இயற்பெயர் எதுவாக இருந்தாலும், அவன் நமக்கு அறிமுகமாகும் பெயர் 'கயவன்' என்பதாகும்" என்கிறார்.

வன்முறையால் பிறர் பறித்துக் கொண்டாலல்லது; இன்முறையில் பிறர்க்கு ஈயும்பண்பு சிலபணம்படைத்தவரிடத்தில் இருப்பதில்லை; அவரெல்லாம் கயவராகக் கருதப்பட வேண்டியவர் என்ற விளக்கத்தைத் திருவள்ளுவர் தருவது கண்டு நாமெல்லாம் மகிழ்கிறோம்.

"இந்தக் கருத்தைக் குறளாக உருவாக்கித் தாங்கள் தரவேண்டும்" என்று நாம் வள்ளுவரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

வள்ளுவரும் அதற்கு இசைந்து, குறட்பா ஒன்றை உருவாக்குகிறார்.

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

ஈர்ங்கை விதிரார் கயவர்
கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு

[குறள்—1077]

[பொழிப்புரை: கயவர், தம் முகவாய்க்கட்டையை உடைக்கும் தன்மையதான வளைந்த (விரல்மடக்கியதான) கையினை உடையவராக இல்லாதவர்க்கு, தாமுண்டு கழுவிய கையை (உதறவேண்டும் என்று பிறர் இரந்து கேட்டாலும்) உதறமாட்டார்கள்,]

கொடிறு—முகவாய்க்கட்டை; கூன்கை-வளைந்தகை; முறுக்கிய கை.

கயவர் மெலியோர்க்கு யாதொன்றும் கொடுக்க மாட்டார்கள்; தம்மை அச்சுறுத்தும் வலியோர்க்கு எல்லாவற்றையுங் கொடுப்பார்கள் என்பது இதன் கருத்து.

இந்தக் குறள் பாட்டை அடிப்படையாக வைத்து, நல்வழியில் ஒரு பாட்டு வருகிறது.

"பெற்றார் பிறந்தார் பெருநாட்டார்
பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார்
—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர்
இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்."

பெற்றோராயிருந்தாலும், உற்றோராயிருந்தாலும் கயவர் ஏறெத்தும் பார்க்கமாட்டார்களாம். இரணம் உண்டாகும்படி யாராவது அடிகொடுத்தால் கொடுப்பார்கள், சரணம் என்று கும்பிட்டு இரந்தால் அவர்கள் ஏதுங் கொடுக்கமாட்டார்கள். இது நல்வழியில் வருகிற பாடலின் கருத்து.

குறளில் வந்துள்ள கருத்தை அப்படிவைத்து மற்றொரு பாடலும் இருக்கிறது. அதுவும் குறளடிகளால் ஆனபோதிலும், திருக்குறளில் உள்ள செழுமை — கருத்துச்செறிவு அவ்வளவாக இல்லை. மிகப் பிற்பட்ட காலத்தில் உண்டானதால், வழக்கத்தில் வந்துவிட்ட எளிய சொற்களால் அந்தப் புதுக்குறள் அமைக்கப் பட்டுள்ளது.

"பாடுவார்க் கீயாரே பல்லுதிரத்
தாடையிலே
போடுவார்க் கீவார் பொருள்"

பாட்டுப்பாடி, இரந்து பொருள்கேட்டால் கயவர் கொடுக்கமாட்டார்களாம். ஆனால் பல்லுதிரத் தாடையில் இரண்டு கொடுத்துப் போடு என்றால் உடனே கொடுத்துவிடுவார்களாம். நகைச்சுவையும் பொருட்சுவையும் விளங்க இந்தப் பாடல் திருக்குறளின் பாடலை எதிரொலிக்கிறது. ○

களுக்கு நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் எனச் செலவிடுகின்றனர்; கவர்னர்களுக்கு பத்து லட்ச ரூபாய்களை அள்ளி வீசுகின்றனர், ராஷ்டிரபதி பவனத்தையும், ராஜ பவனங்களையும் கோடிக்கணக்கில் செலவழித்து பாதுகாக்கின்றனர்! வெள்ளைக்காரன் ஏகாதிபத்தியத்தில் இருந்த கொள்ளைக்காரச் சம்பளங்கள் காங்கிரசார் ஆட்சியில் குறையவில்லை. ஒன்றுக்கு ஐந்தாக வளர்ந்துள்ளது! வெள்ளை ஏகாதிபத்தியத்துக்குப் பதில் மற்றொருவித ஏகாதிபத்தியம் இப்பொழுது இருக்கிறது! ○

இரயில்வே விபத்துக்கள்

——(0)—— அன்பன்

ஆண்டுதோறும் அதிகமாகின்றன!

——(0)——

ஆண்டுதோறும் இரயில்வே விகிதங்கள் கூடிக்கொண்டு போகின்றனவே தவிர, மக்களுக்கு இரயில்வே செய்து தரும் வசதிகள் குறைவாகவே உள்ளன. "மந்தைகளைப் போல" மக்களை அடைத்துச் செல்லும் காட்சி இந்திய இரயில்வேயின் தனிப்பட்ட உரிமையாகிவிட்டது. கோடிக்கணக்கில் அதிகமான வருவாய் வந்து, மிகுதி இலாபங் காட்டியபோதிலும் இரயில்வே நெருக்கடி குறையவேயில்லை. அண்மையில் குறையும் என்ற நம்பிக்கையும் இல்லை. பம்பாயில் சர்ச்கேட் என்ற இடத்தில் புதிதாகக் கட்டப்பட்ட இரயில்வே நிலையத்தைத் திறந்து வைத்த மத்திய இரயில்வே மந்திரி கனம் ஜகஜீவன்ராம் அவர்கள்" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியில் இரயில்வேயிலுள்ள இட நெருக்கடி கூடியிருக்குமே தவிர, குறையாது" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

மக்களுக்கு வசதி செய்து தருவது தான் குறைந்திருக்கிறது என்றால், மக்களுக்குத் தரும் ஆபத்துக்கள் குறைவதாகத் தெரியவில்லை. பெரும் இரயில் விபத்துக்களும், அவற்றில் விழும் பிணங்களின் எண்ணிக்கையும் அதிகமான படிதான் இருக்கின்றன. அரசாங்கத்தின் திறமையற்றபோக்கும், அதிகாரிகளின் அலட்சிய மனப்பான்மையுமே முக்கிய காரணங்களாக அந்த விபத்துக்களுக்குப் பின் தரப்படுகின்றன. சான்கான், மகபூப் நகர், அரியலூர் போன்ற பெரும் விபத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்பியதாகத் தெரியவில்லை. முறையான வகையில் என்ஜின்களும் பாலங்களும் குற்றங்குறைகள் காணப்பட்டு புதுப்பிக்காத காரணத்தால் பல விபத்துக்கள் ஏற்பட ஏதுவாயிருக்கின்றன. இருக்கின்ற குறைந்த வசதிகள் அதிகப்பேர்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதால் ஓரோர் சமயம் திறமை குறைந்து, விபத்துக்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

இரயில்வேயின் வருமானத்தைப் பெருக்குவதில் மட்டும் அரசாங்கம் குறியாயிருக்கிறதேயன்றி, இடநெருக்கடியைத் தீர்க்கவோ, புதிய வசதிகளைக் கூட்டவோ, இருக்கும் குறைகளைக் கவனித்து விபத்துக்களைத் தடுக்கவோ, முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இரயில்வேசம்பந்தப்பட்டவரையில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றத்தையும் உண்டாக்க வகை செய்யப்படவில்லை. இரயில்வே பயணம் செய்பவர்களுக்கான வசதிகள் வரவரக் குறைந்து, அவர்கள் செலுத்துகின்ற டிக்கட்பணம் அதிகமாவதைத் தவிர அரசாங்கம் இரயில்வேயில் வேறு அக்கரை காட்டவில்லை.

வசதிகளும் குறைகின்றன, இடநெருக்கடியும் அதிகமாகிறது, அத்துடன் வழியில் நடக்கின்ற ஆபத்துக்களும் அதிகமாகின்றன. அண்மையில்கூட, ஜுன் 2ந்தேதியன்று பம்பாயில் ஒரு கோர இரயில் விபத்து உண்டாகி, அதில் இருபது பேருக்குமேல் இறந்து போயும், பலர் படுகாயப்பட்டுத் தூக்கிச் செல்லவுமான நிலை ஏற்பட்டது. சான்கான், மகபூப் நகர், அரியலூர் இவைகளையடுத்து, பலரின் உயிர்களைப் பலிகொள்ளும் விதத்தில் பம்பாய் இரயில் விபத்தும் வந்துள்ளது.

விபத்தில் சிக்கியவர்களுக்கு ஆறுதல் சொல்வதுடன், விபத்தில் மாண்டவர்களுடைய குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அரசாங்கம் நின்றுவிடுகிறது. சிலசமயங்களில் பொதுமக்களின் கவனம் அதிகமாக ஈர்க்கப்பட்டிருந்தால் விசாரணைக்குழுவை நியமித்து அரசாங்கம் அனுப்பி வைக்கும், ஆறுமாதம் கழித்தோ,ஓராண்டு கழித்தோ, விசாரணைக்குழு தனது அறிக்கையைத் தரும். அதற்குள் மக்களின் கோபம் மங்கிவிடும். விசாரணைக்குழு தருகிற அறிக்கை தங்களுக்குச் சாதகமாக இருந்தால், அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளும். இல்லையென்றால், அந்த அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, தன்போக்கில் நாட்டையும் இரயில்வே நிர்வாகத்தையும் அடுத்த விபத்துக்குத் தயார் செய்து கொண்டிருக்கும்.

இரயில்வே விபத்துக்கள் ஏராளமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சில விபத்துக்கள் மக்களின் கவனத்தை கவருமளவு பத்திரிக்கைகளில் வெளியாகிவிடுகிறது. ஆனால் நூற்றுக்கணக்கான விபத்துக்கள், அதிகச் சேதங்களை விளைவிக்காத காரணத்தால், வெளியில் தெரிவதில்லை. வண்டி தண்டவாளத்தை விட்டு நகர்ந்துவிடுவது, ஒரு வண்டித்தொடர் மற்றொரு வண்டி மீது மோதிக்கொள்வது, போக வேண்டிய பாதையைவிட்டு வேறொரு பாதையில் வண்டி புகுந்து சென்றுவிடுவது, சில சமயங்களில் டிரைவர் இல்லாமல் இன்ஜின் மட்டும் தடதட வென்று ஓட ஆரம்பித்து விடுவது, இப்படி பலவிதமான சிறு விபத்துக்கள் நிகழ்ந்தபடி இருக்கின்றன. இவ்வாறு நிகழும் சிறு விபத்துக்களும் சிறிது தவறினாலும் பெரிய ஆபத்துக்களை உண்டாக்கவல்லன.

ஆண்டுதோறும் கணக்கெடுத்தால் சிறு விபத்துக்களும் பெரும் விபத்துக்களுமாக ஏராளமாக, படித்தால் பயத்தைத் தருமளவு நிகழ்கின்றன. 1954 55ல் இந்திய இரயில்வேக்களில் மொத்தம் 12,922 விபத்துக்கள் ஏற் பட்டன; 1955-56ல் 13,535 விபத்துக்கள் ஏற்பட்டன.

வேறுவகையில் வளர்ச்சி காணவிட்டாலும், ஏற்படும் விபத்துக்களில் இந்திய அரசாங்கத்தின் இரயில்வே நிர்வாகம் ஆண்டுதோறும் நல்ல வளர்ச்சியைக் காட்டியபடி தான் இருக்கிறது!

அணுசக்தியின் ஆபத்து

——(0)——

"அணுக்குண்டுகளை வெடித்து, வானில் அணுச்சக்திகளை பரப்புவதால், ஆண்டுதோறும் குறைந்தது ஆயிரம்பேர்களாவது இரத்தக்கோளாறு நோயாலும், எலும்புப் புற்று நோயாலும் இறக்க நேரிடும்" என்று அமெரிக்காவில் கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் பாலிங் என்ற விஞ்ஞானி அறிவித்துள்ளார். டாக்டர் பாலிங் உயிர்வகை விஞ்ஞான மாறுபாடுகளில் சிறந்த ஆராய்ச்சியாளர். மேலும் விஞ்ஞானத்துறையில் செய்த ஆராய்ச்சிகளுக்காக நோபல்பரிசுபெற்றவர். அணுச்சக்தி உடலில் உண்டாக்கும் மாறுபாடுகளைக் கண்டறிந்த அவர் கீழ்க்கண்ட முடிவுகளைத் தருகிறார்.

"அணுக்குண்டு வெடிப்பதால் காற்றில் பரவுகிற அணுத்துகள் பட்டுபலர் செத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஒவ்வொரு அணுக்குண்டும் வெடிப்பதால், காற்றில் இருக்கும் அணுத்துகள் சக்தியின் ஆபத்து அதிகமாகிறது.

சண்டைக்காலத்தில் ஏற்படும் ஆபத்தைவிட, இப்பொழுது அதிக ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆகையால் அணுக்குண்டுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் அணுக்குண்டு வெடிப்பதை நிறுத்த வேண்டும்."

அணுக்குண்டுகளைத் தடைசெய்வதற்காக உலகிலுள்ள பிரபல விஞ்ஞானிகளையெல்லாம் ஒன்றுதிரட்டும் பணியில் டாக்டர்பாலிங் ஈடுபட்டுள்ளார். அணுக்குண்டு வெடிப்பதை நிறுத்தச் சொல்லி அவர் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்காவில் இருக்கும் 2000 விஞ்ஞானிகள் கையெழுத்திட்டுள்ளனர். அதைப்போலவே மற்ற நாடுகளிலிருக்கும்-ருஷியாவில் இருப்பவர்களையும் சேர்த்து எல்லா விஞ்ஞானிகளின் ஆதரவையும் பெறும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார். அதற்காக பிரான்சிலும், ஐரோப்பாவிலும் பிரசாரம் செய்ய அவர் ஐரோப்பா வந்துள்ளார்.

"அணுக்குண்டுகள் வெடித்து 'அணுச்சக்தியை' பரப்புவதால், வருங்காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊனமும் பலமின்மையும், மற்றும் பலவித நோய்களும் உண்டாகலாம். விஞ்ஞான ஆராய்ச்சிகளில் இந்த முடிவு நன்றாகத் தெரிகிறது," என்று டாக்டர் பாலிங் கூறுகிறார்.

500 கோடி ரூபாய்க்கு ஊழல்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மந்திரி கண்டுபிடித்ததற்கே இவ்வளவு பரபரப்பும், ப...மும் இருந்தால், பக்ராநங்கல் தாமோதரப் பள்ளத்தாக்கு போன்று 170 கோடி 110கோடி என்று கோடிக்கணக்கில் பணம்புரளும் திட்டங்களில் நடைபெறும் ஊழல்களை எடுத்துச்சொல்ல யாருக்கு வலிமை பிறக்கும்? மந்திரி ஒருவருக்கே ஊழலைக்கண்டுபிடித்த பின் "பதவி போகுமா? போகாதா?" என்று விவாதிக்கப்படுகிறதென்றால், சாதாரணமாக வேலை பார்ப்பவர்கள், சம்பளக்காரர்கள் எப்படி ஊழல்களை வெளிப்படுத்த முனைவருவார்கள்?

காங்கிரசாட்சியில், ஊழல்கள் நடைபெறுவது தெரிந்தும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் ஊழலால் பாழாகும்என்று காங்கிரசு உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தபொழுது யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பம்பாய்க்கு 300 கோடி, பக்ராநங்கலுக்கு 200 கோடி, தாமோதர் பள்ளத்தாக்குக்கு 100 கோடி என்று ஐந்தாண்டுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டது போல, ஊழல்களுக்காக என்று 500 கோடி ஒதுக்கப்பட்டதாகத்தான் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்!

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 55697)